# ஆபிரகாம்

# ABRAHAM

55-0624

(தமிழாக்கம்: சகோ. S. A. ஜெபகுமார்)

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# ஆபிரகாம்

இந்தச் செய்தியானது ஏழாம் தூதன் (வெளி. 10:7) சகோதரன். வில்லியம் மரியன் பிரான்ஹாம் அவர்களால் 1955–ம் வருடம், ஜூன் மாதம், 24ம் தேதி, ஜூரிக், ஸ்விட்சர்லாந்தில் அளிக்கப்பட்டது. ஒலிநாடா ஒலிப்பதிவி லிருந்து அச்சிடப்பட்ட ஆங்கில புத்தகத்திலிருந்து ஏட்டிதழின் பக்கத்திற்கு சொல் வடிவமான செய்தியாக மாற்ற ஒவ்வொரு முயற்சியும் துல்லியமாக செய்யப்பட்டு, இப்புத்தகம் முழுமையாக அச்சிடப்பட்டு, இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது.

*வெளியிடப்பட்டது: ஆகஸ்டு 2018*

## இலவச பிரதிகளுக்கு:

சகோ. J. டோமினிக் சேவியர்
போன்: 9597508574
www.thefinish.in

சென்னையில் வசிக்கும் சகோதரர்கள் (செய்தி புத்தகங்கள் நேரில் பெற): சகோ. பினேகாஸ்

போன்: 8838623242, 9551855108

# ஆபிரகாம்

## (ABRAHAM)

வெள்ளிக்கிழமை மாலை, ஜூன் 24, 1955,
ஜூரிக், ஸ்விட்சர்லாந்து

மாலை வணக்கம் நண்பர்களே. இன்றிரவு நான் மீண்டும் இங்கே இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நான் சற்று களைப்பாயிருக்கிறேன். நான் அமெரிக்காவை விட்டுப் புறப் படுவதற்கு முன்பு, அநேக மகத்தான ஆராதனைகளை நடத்தி முடித்து விட்டேன். எனவே கர்த்தருக்குச் சித்தமானால், நான் வீட்டிற்குப் போகும் போது, சற்று ஓய்வு எடுக்கப் போகிறேன். ஆனால் இங்கே சுவிட்சர்லாந்திலுள்ள அருமையான ஜனங் களாகிய உங்கள் மத்தியில் இருப்பதற்கு நிச்சயமாகவே நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

நான் எல்லாவிடங்களுக்கும் பிரயாணம் செய்துள்ளேன் என்று நம்புகிறேன், சுவிட்சர்லாந்தில் நான் சந்தித்த ஜனங்க ளாகிய உங்களைக் காட்டிலும் அருமையான ஜனங்களை நான் கண்டதேயில்லை. அது உண்மை. நான் அவ்வாறு தான் கருதுகிறேன். நான் அதைக் கூற வேண்டியதில்லை, ஆனால் என்னுடைய இருதயத்திலிருந்து நான் அவ்வாறு கருதுகிறேன். ஆனால் கர்த்தர் உங்களை அதிகமாய் ஆசீர்வதிப்பார் என்று நாங்கள் நம்புகிறோம், நீங்கள் எனக்கு ஆசீர்வாதமாக

இருப்பது போன்று அவ்வளவு அதிக ஆசீர்வாதமாக நானும் உங்களுக்கு இருப்பேன் என்று நம்புகிறேன். தேவனுக்குச் சித்தமானால், ஒருக்கால், வருங்காலத்தில் ஏதோவொரு நேரத்தில் நான் மீண்டும் திரும்பி வரக் கூடுமானால், ஒருவேளை, நீண்ட காலம் உங்களோடு இருப்பேன். வெறுமனே இன்னும் இரண்டு இரவு ஆராதனைகளை நடத்தி விட்டு, பிறகு நான் போக வேண்டியிருக்கிறதே என்று நினைக்கிறேன்.

2. வழக்கமாக அந்தவிதமாகத்தான் நடக்கிறது, நீங்கள் சற்று ஜனங்களோடு பழகும் போது, அப்போதே விடை பெறுகிறேன் என்று கூற வேண்டியிருக்கிறது. ஆனால் ஏதோ வொரு நாளில், அங்கே - அல்லது நாம் எல்லாரும் ஒரே பாஷையைப் பேசுவோம், அப்போது நாம் வயோதிபம் அடையவே மாட்டோம், வியாதியோ மரணமோ இருக்காது என்று நம்புகிறேன். நாம் மறுபடியும் சந்திப்போம், அப்போது நான் உங்கள் ஒவ்வொருவரோடும் ஆயிரம் வருடங்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்ய விரும்புகிறேன். அப்போது நமக்கு நிறைய நேரம் உண்டாயிருக்கும். இதுவே பகற்காலம்; பகற்காலம் இருக்கும்போதே நாம் கிரியை செய்தாக வேண்டும். ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.

இப்பொழுது, இங்கே நிறைய கடிதங்கள் உள்ளன, நீங்கள் தேவனிடத்தில் விசுவாசம் கொண்டிருப்பதற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். இப்பொழுது, யாராவது இதைத் தவறாகப் புரிந்து கொள்ளலாம், ஆனால் இந்த - நாங்களே இந்தக் கடிதங்களில் எதையோ இணைத்திருக்கிறோம் என்பதாக இவைகள் இருக்கவில்லை, இது வெறுமனே தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதாகும். இந்த விதமாக சுகமடைந்திருக்கிற ஜனங்களைப் பற்றிய ஆயிரக் கணக்கான சாட்சிககளை வீட்டில் நான் வைத்திருக்கிறேன். தேவனே தம்முடைய வார்த்தையை கனப்படுத்தினார்.

3. இப்பொழுது, நாங்கள் அவர்களுக்காக ஜெபிக்கப் போகிறோம், தேவன் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன். நீங்கள் என்னோடு கூட உங்கள் தலைகளை வணங்க முடியுமா - உங்கள் தலைகளைத் தாழ்த்தி என்னோடு கூட ஜெபிப்பீர்களா? தேவன் உங்க ளுடைய ஜெபத்தையும் கூட கேட்பார்.

4. எங்கள் பரலோகப் பிதாவே...?... நாங்கள் இந்த கைக்குட்டைகளின் பேரில் ஜெபம் செய்கையில், உமது ஆவி தாமே எங்கள் மேல் வருவதாக. மனிதனாக எங்களில் எதுவுமில்லை என்றும், வெறுமனே உம்முடைய வார்த்தைக் குக் கீழ்ப்படிகிறோம் என்றும் உணர்ந்து கொள்கிறோம். அந்தக் கம்பத்தின் மேல் தூக்கி வைத்திருந்த சர்ப்பத்தில் எந்த வல்லமையும் இல்லாதிருந்தது. அது தூக்கி வைக்கப்பட்டிருந்த அந்த கம்பத்திலும் எந்த வல்லமையும் இல்லாதிருந்தது. ஆனால் (அதை) நோக்கிப் பார்த்தவர்கள் பிழைத்துக் கொண் டார்கள், அது தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதாக இருந்தது. ஓ தேவனே, வானங்களையும் பூமியையும் சிருஷ் டித்தவரே, அவைகளைப் போன்றே இவைகளும் இருப்பதாக, இவைகள் வியாதியஸ்தரிடம் கொண்டு போகப்படும் போது, அவர்கள் ஒவ்வொருவரும் சுகமடைவார்களாக.

பிதாவே, உம்முடைய ஊழியக்காரர்களுக்கு உமது பார்வையில் கிருபை கிடைக்குமானால், இதுவும் அவ்வித மாகவே இருப்பதாக. இயேசுவின் நாமத்தில், ஆமென்.

5. நாங்கள் இரவில் சற்றே மிகவும் தாமதமாக பிடித்து வைத்திருக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டேன். அநேக ஜனங்கள் 9:30 மணிக்கு ரயிலைப் பிடிக்க வேண்டியிருந்ததாக எங்கள் பயணக்குழுவிலிருந்த யாரோ ஒருவர் சென்ற மாலையில் என்னிடம் கூறிக் கொண்டிருந்தார். உரிய நேரம் கடந்தும் நான் உங்களைப் பிடித்து வைத்திருந்ததற்காக வருந்துகிறேன். நான் அவ்வாறு செய்ய நினைக்கவில்லை,

நான் - ஆனால் நான் கூடுதலாக அதிக நேரம் எடுத்துக் கொண்டு விட்டேன். தயவுசெய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

ஆதியாகமம் 22ம் அதிகாரம், 7வது வசனம் தொடங்கி, நாம் இந்த வேதவாக்கியத்தை வாசிப்போம்.

**அப்பொழுது ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி: என் தகப்பனே என்றான்; அதற்கு அவன்: என் மகனே, இதோ, இருக்கிறேன் என்றான்; அப்பொழுது அவன்: இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான்.**

**அதற்கு ஆபிரகாம்: என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான்; அப்புறம் இருவரும் கூடிப்போய்,**

இப்பொழுது, 24வது வசனம். (ஆதியாகமம் 22:14 - தமிழாக்கியோன்.)

**ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான்; அதினாலே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும் என்று இந்நாள் வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது.**

6. நாம் மீண்டும் நம்முடைய தலைகளை வணங்கு வோமா? சர்வவல்லமையுள்ள தேவனே, வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்தவரே, நன்மையான சகல ஆவிக்குரிய ஈவுகளையும் அருளுபவரே, நித்திய ஜீவனின் ஆக்கியோனே, உம்முடைய வார்த்தையின் மேல் உமது ஆசீர்வாதங்களை அனுப்பும். பேசுகிற உதடுகளையும், கேட்கிற இருதயங் களையும் விருத்தசேதனம் பண்ணி, இன்றிரவு தேவனுடைய விதை தாமே இருதயங்களுக்குள் விழுந்து, அநேகர் கர்த்த ராகிய இயேசுவை விசுவாசித்து, தங்களுடைய வியாதி

களிலிருந்து சுகமடைவார்களாக. நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

இப்பொழுது, நான் நீண்ட நேரம் எடுத்துக் கொள்ளாதபடி நீங்கள் என்னைப் பார்த்துக் கொள்ளுங்கள். எனக்காக நேரத்தை கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருங்கள். எனக்காக நேரத்தைப் பார்க்கும்படி அங்கே பின்னாலிருக்கும் மேலாளரிடம் நான் கூறினேன்.

7. நாம் இன்றிரவு மறுபடியுமாக ஆபிரகாமைக் குறித்து பேச விரும்புகிறோம். அந்தப் பழைய (ஏற்பாட்டு) வேதாகம கதாபாத்திரங்கள் எனக்குப் பிடிக்கும், ஏனென்றால் பழைய ஏற்பாட்டினுடைய எல்லாமே புதிய ஏற்பாட்டிற்கு நிழலா யிருக்கிறது. அங்கே பின்னால் நீங்கள் காணும் சகல காரியங் களும் சிலுவையை நோக்கியே சுட்டிக்காட்டுகிறது, அதுமுதற் கொண்டு எல்லாமும் பின்னால் சிலுவையை நோக்கியே சுட்டிக் காட்டுகிறது. எனவே அங்கே சிலுவையில், விசுவாசி களுக்கான இரட்சிப்பின் திட்டங்கள் எல்லாமும் சுகமளித்த லும் செய்து முடிக்கப்பட்டு விட்டன.

இப்பொழுது, அவனுக்குச் செய்யப்பட்ட உடன்படிக்கை யின் உறுதிப்பாட்டை கண்ட இடத்தில் நாம் கடந்த இரவு ஆபிரகாமை விட்டு வந்தோம். தேவன் அவனுக்கு ஒரு வாக்குத்தத்தத்தை அருளியிருந்தார் என்பதையும், ஆபிரகாம் அதை விசுவாசித்தான் என்பதையும், சரியாக அப்போதே அதை அவர் அவனுக்குக் கொடுக்காத போதிலும், அவர் அவனுக்கு வாக்குத்தத்தத்தை அருளினார் என்பதையும் நாம் எப்படியாக கண்டுகொண்டோம். எனவே நீங்கள் வாக்குத் தத்தத்தைப் பெற்றிருப்பீர்களானால், நீங்கள் எப்படியும் அதைப் பெற்று விட்டீர்கள்.

8. நான் கேட்டுக்கொண்டால்... (இங்கே உங்களுக்கு கருவாலி மரங்கள் உண்டா? இங்கே கருவாலி மரங்கள்

இருக்கிறதா?) [சகோதரன் பிரன்ஹாம் மொழிபெயர்ப்பாள ரிடம் பேசுகிறார் - ஆசிரியர்.] ஒரு கருவாலி மரத்தைக் கொடுக்கும்படி நீங்கள் என்னிடம் கேட்டு, நான் உங்களுக்கு ஒரு கருவாலிக்கொட்டையைக் கொடுப்பேன் என்றால், நீங்கள் ஏற்கனவே ஒரு கருவாலி மரத்தை விதை வடிவில் பெற்று விட்டீர்கள். அதைத்தான் நாம் வார்த்தையாக வேதாகமத்தி லிருந்து பிரசங்கிக்க முயற்சிக்கிறோம், அது விதை வடிவி லுள்ள தேவனுடைய வாக்குத்தத்தமாக உள்ளது.

தேவனுடைய வார்த்தையானது விதைக்கிற ஒருவன் விதைத்த விதையாக உள்ளதாக இயேசு கூறினார். தேவ னுடைய ஏதாவது-ஏதாவது தெய்வீக வாக்குத்தத்தத்தை நீங்கள் உங்கள் இருதயத்திற்குள் பெற்றுக்கொண்டு, அத னோடு எந்த அவிசுவாசமும் கலவாமல் இருக்குமானால், அது வாக்குத்தத்தம் பண்ணினதை அப்படியே பிறப்பிக்கும், அது தேவனுடைய வாக்குத்தத்தமாக உள்ளது. ஆபிரகாமைப் போன்று அப்படியே அசையாமல் அதில் உறுதியாக நில்லுங் கள், அப்பொழுது அவர் அதை உங்களுக்கு நிஜமாக்குவார்.

9. இப்பொழுது, இந்த நாற்காலிகளிலும், தூக்குப் படுக்கைகளிலும் (டோலிகளிலும்) இருந்து, இங்கே கூட இருக்கிற ஜனங்களாகிய உங்களை தேவன் நேசிக்கிறார். உங்களுக்கு என்ன கோளாறு இருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல, தேவன், அவர் சர்வவல்லமையுள்ளவராக இருப்பாரானால், அவரால் சகலத்தையும் செய்ய முடியும், அவரால் சகலத்தையும் செய்ய முடியவில்லை என்றால், அவர் சர்வவல்லமையுள்ள தேவன் அல்ல. நான் எதைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறேன் என்பதை அறிந்திரா விட்டால், நான் இங்கே நின்று கொண்டு, உங்களிடம் பேசவே மாட்டேன். நான்...

இப்பொழுது ஒவ்வொரு இரவும், முடக்கு வாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களோ, அல்லது ஏதோ கோளாறைக்

கொண்ட யாரோ ஒருவரோ, தூக்குப்படுக்கையிலிருந்தோ அல்லது சக்கர நாற்காலியிலிருந்தோ எழுவதையும் நீங்கள் கவனிக்கிறீர்கள். அவர்கள் சுகமடைந்தவர்களாக வெளியே செல்வதையும், செவிடர்கள் கேட்பதையும், குருடர்கள் காண்பதையும், ஜீவனுள்ள தேவனுடைய அடையாளங் களையும் காண்கிறீர்கள். பாருங்கள், தேவன் இன்னும் ஜீவிக்கிறார். தேவன் பூமியை விட்டுப் போய் விடவில்லை. சிலசமயங்களில் அவர் தம்முடைய மனிதனை எடுத்துக் கொள்கிறார், ஆனால் அவருடைய ஆவியை எடுத்து விடுவதில்லை. அவர் எலியாவை எடுத்துக்கொண்டார், அவருடைய ஆவியோ எலியாவின் மேல் வந்தது. அநேக நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப் பிற்பாடு, அது யோவான் ஸ்நானகனின் மேல் வந்தது, மேலும் இந்தக் கடைசி நாட்களில் அது மறுபடியும் வரும் என்று முன்னறி விக்கப்பட்டுள்ளது. தேவனே அதை வாக்குப்பண்ணியுள்ளார்.

10. இப்பொழுது, பிசாசு, அவன் தன்னுடைய மனிதனை எடுத்துக்கொள்கிறான், அதுவோ - அந்த ஆவியோ வேறு யாராவது ஒருவர் மேல் இங்கேயே தொடர்ந்து இருக்கிறது. பரிசேயர்கள் இயேசுவை விசுவாசிக்காத காரணத்தினால், அவர் அவர்களிடம் கூறினார். அவர்-அவர்கள்-அவர் அவர் களுடைய உபதேசத்தைப் போதிக்கவில்லை. அவர், "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்." என்றார். "தீர்க்கதரிசிகளை உங்கள் பிதாக்களில் யார் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்?" என்றார். பாருங்கள், அந்த ஆவி தொடர்ந்து இங்கேயே இருக்கிறது, அந்த நபர் தான் கடந்து போகிறான். அதன்பிறகு உயிர்த்தெழுதலில் நியாயத் தீர்ப்பு இருக்கிறது.

இப்பொழுது, ஆபிரகாம் வெளியே ஒரு அந்நிய தேசத்திற்கு சென்று, தேவனுடைய வாக்குத்தத்தத்தின் பேரில் பரதேசியாய் சஞ்சரித்த முதலாவது நபராயிருந்தான். ஆனால்

அவன் தன்னோடு சகவாசம் செய்த தன்னுடைய உலக கூட்டாளிகள் எல்லாரையும் விட்டுத் தன்னைத்தானே வேறு பிரித்துக் கொண்டு, தேவனோடு ஒரு சிநேகிதனாக இருக்க அவரோடு தனிமையாக நடந்தான்.

11. தேவன் அந்த உடன்படிக்கையை எவ்வாறு உறுதிப் படுத்தினார் என்பதை சென்ற இரவு நாம் கண்டுகொண்டோம், அவர் கல்வாரியில் எதைக் காண்பித்துக் கொண்டிருந்தார் என்பதைக் குறித்த அழகான காட்சியை நாம் அங்கே கண்டுகொள்கிறோம், அங்கே தான் அவர் தம்முடைய சொந்த குமாரனை பலியாக கொடுக்கப் போவதாக இருந்தார். அதன்பிறகு அவர் மீண்டும் ஆபிரகாமுக்குத் தோன்றி, தாம் மார்பகம் கொண்டவர் என்பதை அவனிடம் கூறி, எனவே ஆபிரகாம் அவருக்கு ஒரு குழந்தையைப் போல இருக்க முடியும் என்றும், அப்படியே அவரிடமிருந்து பாலை, பலத்தை அருந்தும்படியாகவும் அவர் அவனிடம் கூறினார், காரணம் என்னவென்றால் ஆபிரகாம் வயது சென்றவனா யிருந்தான். அவனுக்கு ஏற்கனவே 100 வயதாயிருந்தது, சாராளுக்கு தொண்ணூறு வயதாக இருந்தது. கடைசியாக மாதவிடாய் நின்றுபோய் ஐம்பது வருடங்களோ அல்லது நாற்பது வருடங்களோ ஆகியிருந்தது. அவள் ஒரு சிறு பெண்ணாய் இருந்த போதே அவன் அவளை விவாகம் பண்ணியிருந்தான், அப்போது அவன் ஒரு வாலிபனாக இருந்தான். இந்த வருடங்கள் எல்லாம் அவர்கள் கணவன் மனைவியாக ஒன்றாக வாழ்ந்து வந்திருந்தனர். அதன்பிறகு மாதவிடாய் நின்று, அப்போது நாற்பது வருடங்கள் ஆகி யிருந்தது, அவர்கள் அப்பொழுதும் தேவனுடைய வாக்குத் தத்தத்தை விசுவாசித்துக் கொண்டிருந்தனர். அது-அது அற்புத மாயுள்ளது.

12. நாம் எல்லாருக்கும் அந்தவிதமான விசுவாசம் தான் அவசியம். அதைக் குறித்து தர்க்கம் பண்ணிக் கொண்டிருக்க

வேண்டாம். அது… வேதாகமம் தர்க்கம் பண்ணப்பட வேண்டியது அல்ல. அது… வேதாகமம் பிரசங்கம் பண்ணி, ஜீவிக்கப்பட வேண்டியதாகும். இயேசு, "என் பிதாவின் கிரியைகளை நான் செய்யாதிருந்தால், நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டாம். ஆனால் என் பிதாவின் கிரியைகளை நான் செய்வேனேயாகில், அந்த வார்த்தையை விசுவாசியுங்கள்" என்று கூறினார். இன்று, நாம் கிறிஸ்தவ ஜீவியம் செய்யாதவர்களாக இருந்தால், நல்லது அப்படி யானால், நாம் கிறிஸ்தவர்கள் அல்லவென்று ஜனங்களால் கூற முடியும். ஆனால் கிறிஸ்து உங்களுக்குள் இருப்பாரானால், அவர் உங்களுக்குள் இருந்து தம்முடைய ஜீவனை ஜீவிக்கிறார்.

13. பவுல், "இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று கூறினது போல. கிறிஸ்து ஒரு மனிதனுக்குள் ஜீவிப்பாரென்றால், அவர்… அவர் இங்கே பூமியில் இருந்த போது, ஜீவித்தது போன்று தம்முடைய ஜீவனை கிறிஸ்து ஜீவிக்கிறார், அவர் அவ்வாறு கூறியுள்ளார். அவர், "இன்னும் கொஞ்ச காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள். உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களோடு இருப்பேன். நான் செய்கிற கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்" என்றார். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார், அவர் இங்கே பூமியில் இருந்த போது, கொண்டிருந்த அதே வல்லமையில் அவர் இப்பொழுது இங்கேயிருந்து, அதே காரியங்களைச் செய்து கொண்டும், அதே வகையான ஜனங்களை இரட் சித்துக்கொண்டும், அதேவிதமான வியாதியஸ்தர்களை சுகமாக் கிக்கொண்டும், அதே விதமான தரிசனங்களைக் காண்பித்துக் கொண்டுமிருக்கிறார்.

14. புதிய ஏற்பாட்டில், சபையானது முதலில் துவங்கின போது, பேதுரு சபைக்குத் தன்னுடைய செய்தியைக் கூறி

னான், தேவன், "கடைசி நாட்களில், நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். உங்கள் குமாரரும் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். உங்கள் வாலிபர்கள் தரிசனங்களைக் காண்பார்கள்" என்றார். இயேசு செய்த காரியங்கள் மறுபடியுமாக கடைசி நாட்களில் செய்யப் படும் என்பதாக தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். நாம் அந்த நாட்களில் தான் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்.

இயேசு தாம் ஒரு மகத்தான சுகமளிப்பவர் என்று உரிமை கோரவில்லை. அவர் எல்லா துதியையும் தேவனுக்கே கொடுத்தார். அவர், "நானாக எதையும் செய்ய முடியாது" என்றார். அவர் ஏன் வியாதிப்பட்ட எல்லா ஜனங்களையும் சுகமாக்கவில்லை என்று அவரிடம் கேட்கப்பட்ட போது, அவர் அவ்வாறு கூறினார்.

15. அவர் வெளியே பெதஸ்தா குளத்திற்குச் சென்ற போது, அங்கே ஆயிரக்கணக்கான நொண்டிகள், வளைந்த உறுப்புக்களைக் கொண்டவர்கள், சப்பாணிகள், குருடர்கள் படுத்திருந்தனர். ஒரு படுக்கையில் (pallet) படுத்திருந்த ஒரு மனிதனை அவர் கண்டுபிடிக்கும் மட்டுமாக, அவர் அவர்கள் மத்தியில் நடந்து சென்றார். அவர் அவனைச் சுகமாக்கி விட்டு, மற்றவர்களை விட்டுச் சென்று விட்டார். அது பரிசுத்த யோவான் 5ம் அதிகாரம். 19ம் வசனத்தில் அவரிடம் கேள்வி கேட்கப்படுகிறது. அவர், "மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி வேறோன்றையும் தாமாய்ச் செய்ய மாட்டார். அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்" என்றார்.

கிறிஸ்து தேவனிடத்தில் பரிபூரண விசுவாசம் உள்ளவ ராயிருந்தார். இயேசு வெறுமனே சரீரம் தான், தேவன் தான் அவருக்குள் இருந்தார். தேவன் கிறிஸ்துவுக்குள் இருந்து,

உலகத்தைத் தமக்கு ஒப்புரவாக்கிக் கொண்டார் என்று வேதாகமம் கூறுகிறது.

16. இப்பொழுது, ஆபிரகாம், அவன் வாக்குத்தத் தத்தைப் பெற்றுக்கொண்ட நேரத்தில், பிரயாணம் பண்ணிப் போனான், பிறகு அவன் - தேவன் அவனுக்கு வாக்குத் தத்தத்தை உறுதிப்படுத்தினார். எனவே லோத்து தன்னைத்தான் பிரித்துக்கொண்ட பிறகு, இப்பொழுது ஏறக்குறைய ஆதியா கமம் 18ம் அதிகாரத்தில் அவனை நாம் காண்கிறோம்; லோத்து வெளியே சோதோம் கொமோராவுக்குள் சென்றான், அது உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளின் மீதும் அன்புகூரும் இன்றைய வெதுவெதுப்பான விசுவாசிகளுக்கு மிகவும் அழகான முன்னடையாளம். "நீங்கள் உலகத்திலோ, உலகத்தில் உள்ளவைகளிலோ அன்புகூர்ந்தால், ஏற்கனவே உங்களுக்குள் தேவனுடைய அன்பு இல்லை" என்று வேதா கமம் கூறுகிறது.

எனவே லோத்து பின்வாங்கிப் போனவர்களோடு கூட போய் விட்டான். ஆனால் ஆபிரகாமை தேவன் எங்கு வைத்திருந்தாரோ அவன் அங்கேயே தரித்திருந்தான், அவன் முழு காரியத்தையும் சுதந்தரிக்கப் போகிறான் என்று தேவன் அவனுக்கு வாக்குப்பண்ணியுள்ளார் என்பதை அவன் அறிந்திருந்தான்.

17. இந்நிலையில் அந்த பூமியோ மோசமாக இருந்தது. அநேகமாக மந்தைகள் மிகவும் மெலிந்து போய் காணப் பட்டன. ஒரு நாள் ஆபிரகாம் அந்த கருவாலி மரத்தின் கீழே உட்கார்ந்து கொண்டிருக்கையில், அவன் தன்னுடைய கண்களை ஏறெடுத்துப் பார்த்த போது, தனக்கு முன்பாக மூன்று மனுஷர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் சர்வவல்லமையுள்ள தேவன் தாமே. தேவன் ஏன் தம்மேல் தூசிபடிந்தவராக அந்த ரூபத்தில் தோன்றினார் என்பதைக் குறித்து வியப்படைகிறேன். ஆபிரகாம் அவரை

உள்ளே அழைத்தான், அவன் போய் ஒரு கன்றுக்குட்டியைக் கொன்று, அந்த இறைச்சியை சமைத்து, கொஞ்சம் எண் ணெயையும், கொஞ்சம் பாலையும் எடுத்துக் கொண்டு வந்தான், சாராள் போய் கொஞ்சம் ரொட்டியையும் எடுத்துக் கொண்டு வந்தாள், அவன் அவர்கள் முன்பாக அவைகளை வைத்தான். சர்வவல்லமையுள்ள தேவன் ஒரு மனிதனைப் போன்று ஆகாரம் புசித்தார்.

தேவன் அங்கே என்ன செய்தார் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்கிறீர்களா. அவர் கை நீட்டி (reached out), கைப்பிடி நிறைய அணுக்களையும், கொஞ்சம் பெட்ரோ லியத்தையும், (பெட்ரோலியத்தையும், எண்ணெய்களையும், மற்றும் காரியங்களையும் நீங்கள் அறிவீர்கள்) [சகோதரன் பிரன்ஹாம் மொழிபெயர்ப்பாளரிடம் பேசுகிறார் - ஆசிரியர்.] காஸ்மிக் வெளிச்சத்தையும் எடுத்து, மனித சரீரம் எவை களைக் கொண்டு உண்டாக்கப்பட்டுள்ளதோ அவைகளை எடுத்து, அதை ஒன்று சேர்த்து, அதற்குள்ளே ஜீவித்தார். எப்படியும் அவர் என்னவாக இருந்தார் - அவர் என்னவாக இருக்கப் போகிறார் என்பதன் முன்காட்சியாக அது இருந்தது. அவர் கிறிஸ்து இயேசுவுக்குள்ளே மாம்சத்தில் வெளிப் பட்டார்.

18. ஓ, அவர் அற்புதமானவர். ஏதோவொரு மகிமை யான நாளில், நமது இந்த சரீரங்கள் அவை எங்கிருந்து வந்ததோ அங்கேயே திரும்பிப் போகும். ஆனால் நம்மு டைய ஆவி தேவனோடு சரியாக இருக்குமானால், உயிர்த் தெழுதலின் போது, ஒவ்வொவரும் மீண்டும் திரும்பி வருவோம்.

அன்றொரு நாள் நான்-நான் என்னுடைய தலை முடியை வாரிக் கொண்டிருந்தேன், என்னுடைய மனைவி,

"பில்லி, உம்முடைய பெரும்பாலான தலைமயிரை நீர் இழந்து கொண்டிருக்கிறீர்" என்றாள்.

நான், "ஆனால், தேனே, நான் அவைகளில் ஒன்றை யும் இழந்து போகவில்லை" என்றேன்.

அவள், "அவைகள் எங்கேயிருக்கின்றன?" என்று கேட்டாள்.

நான், "நான் அவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு, அவைகள் எங்கே-எங்கே இருந்தன? இப்பொழுது அங்கே தான் அவைகள் இருந்து, உயிர்த்தெழுதலில் எனக் காகக் காத்துக் கொண்டிருக்கிறது" என்றேன். ஆமென். அவைகள் ஒருசமயம் இல்லாதிருந்தது. அதன்பிறகு ஒரு சமயம் அவைகள் இருந்தது. இப்பொழுது, அவைகள் இல்லாத ஒரு நேரமாக இருக்கிறது. ஆனால் வேதா கமத்தின்படி, அவைகள் மறுபடியும் இருக்கும் ஒரு நேரம் வரும்.

19. நான் அன்றொரு நாளில், ஒரு மருத்துவரை சந்தித் தேன். நான், "டாக்டர், நாம் ஒவ்வொரு தடவை ஆகாரம் புசிக்கும் போதும், நம்முடைய சரீரத்திலுள்ள இரத்த - இரத்த உயிரணுக்களை நாம் உருவாக்கி, அது நம்மை வளரச் செய்கிறது என்பது உண்மை தானா?" என்று கேட்டேன்.

அவர், "அது உண்மை" என்றார்.

நான், "நான் உம்மிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். எனக்கு 16 வயதிருக்கும் போது, நான் புசித்த அதே விதமான ஆகாரத்தையே இப்பொழுதும் புசித்து வருகிறேன். எனக்கு 16 வயதில், நான் ஆகாரம் புசித்த போது, நான் வளர்ந்து, திடகாத்திரமாகவும், பெரியவனாகவும் ஆனேன். இப்பொ ழுதோ, நான் அதே ஆகாரத்தையே புசிக்கிறேன், ஒருக்கால் அதிலும் மேலான அதிக ஆகாரங்களையே புசிக்கிறேன்,

(ஆனால்) நான் எல்லா நேரமும் வயதானவனாகவும் பலவீனமானவனாகவும் ஆகி வருகிறேன். அதை விளக்குங்கள்" என்றேன். அது விஞ்ஞானப்பூர்வமானதல்ல.

இந்தக் கண்ணாடிக் குவளையில் தண்ணீரை எடுத்து, நீங்கள் அதில் இன்னும் அதிக தண்ணீரை ஊற்றுவீர்களானால், அது அப்படியே தொடர்ந்து முழுவதும் நிரம்பி நிரம்பிக் கொண்டேயிருக்கும். ஆனால் அது ஏன் அவ்வாறு இருக்கிறது, அது குறிப்பிட்ட இடம் வரை நிரம்பும் போது, நீங்கள் அதில் தொடர்ந்து தண்ணீரை ஊற்றிக்கொண்டேயிருப்பீர்களானால், அது தொடர்ச்சியாக கீழே வழிந்த வண்ணம் இருக்கும்? ஏனென்றால் தேவன் அவ்வாறு கூறியிருக்கிறார். அதுதான் காரணம். தேவனுக்கு ஒரு வழி உண்டு. அப்படியே அந்த மலரைப் போன்று, அது துவங்கி, முழு முதிர்ச்சி அடைந்த நிலைக்கு வருகிறது, அதன்பிறகு அது வாடி வதங்கிப் போக துவங்குகிறது, ஆனால் அது மீண்டும் திரும்பி வருகிறது.

20. இப்பொழுது, தேவன் அங்கே ஒரு சரீரத்தில் ஆபிரகாமைச் சந்தித்து, அவர் அவனிடம் அதைக் கூறின போது, அவன் அவருடைய கால்களிலிருந்த தூசியைக் கழுவ வேண்டியதாயிருந்தது. அது தேவன் என்று வேதாகமம் கூறுகிறது... அவர் கூடாரத்துக்குப் பக்கமாகத் தம்முடைய முதுகைத் திருப்பியிருந்து, அவர், "ஆபிரகாமே, சாராள் எங்கே?" என்று கேட்டார்.

"அவள் கூடாரத்தினுள் இருக்கிறாள்" என்று அவன் கூறினான்.

அவர், "ஸ்திரீகளுக்கு இருப்பதைப் போன்று, ஒரு உற்பவகாலத்திட்டத்தில், நான் உன்னைக் காண வருவேன்" என்று கூறினார். சாராள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். சாராள் அதைக் கேட்ட போது, தன் இருதயத்தில் நகைத்தாள்,

உரத்த சத்தமாக அல்ல. சாராள் இருந்த கூடாரத்தின் பக்கமாக தம்முடைய முதுகைத் திருப்பினவராக அவர் இருந்தார் என்று வேதாகமம் கூறுகிறது, அவர் ஆபிரகாமை நோக்கிப் பார்த்து, "சாராள் ஏன் நகைத்தாள்?" என்று கேட்டார்.

நான் என்ன கூற கருதுகிறேன் என்று புரிகிறதா? தேவனுக்கு எல்லாம் தெரியும். நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்று அவருக்குத் தெரியும். உங்களுக்கு என்ன கோளாறு உள்ளது என்று அவருக்குத் தெரியும். அது எப்போதுமே தேவனுடைய ஒரு அடையாளமாக இருந்து வருகிறது...?... பாருங்கள், முன்னறிந்து, முன்னறிவித்தல். கிணற்றண்டையில் இருந்த அந்த ஸ்திரீயைப் பார்த்து, அவளுக்கு ஐந்து புருஷர்கள் உண்டு என்று இயேசு அவளிடம் கூறின போது, அந்த ஸ்திரீயைக் கவனித்துப் பாருங்கள். ஏன்-ஏன் அவள், "மேசியா வரும்போது, இவைகளைச் செய்வார் என்று எனக்குத் தெரியும்" என்று கூறினாள், ஆனால் அவர் ஒரு தீர்க்கதரிசி என்று அவள் நினைத்தாள், ஆனாலும் தான் தேவகுமாரன் என்று அவர் அவளிடம் கூறினார். அவர் இன்றைக்கும் மாறாதவராக இருக்கிறார். அது அங்கே முற்காலத்தில் ஆபிரகாமோடு இருந்து, ஒரு சரீரத்தில் வெளிப்பட்ட தேவ குமாரனாக இருந்தது. ஓ, உங்களுக்கு அது புரிகிறது என்று நம்புகிறேன்.

21. இப்பொழுது, கவனியுங்கள், அப்போது தேவன் அதைக் கூறினார், அதன்பிறகு அது அடுத்த மாதமாக இருந்தது. அது நின்று போய் 40 வருடங்கள் கழித்து, அடுத்த மாதத்தில், ஸ்திரீகளுக்கு இருப்பது போன்று சாராளுக்கும் இருந்தது. இங்கே வேறொரு சிறிய காரியத்தையும் நீங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். என்னுடைய சகோதரர்களே, நீங்கள் இதை குறை கூறப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும், ஆனால் சற்று நேரம் அமைதியாக இருந்து, நீங்கள் வீட்டிற்குப் போன பிறகு, நீங்கள் இதை

ஆராய்ந்து பார்க்க விரும்புகிறேன். அங்கே தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தைக் கொடுத்த போது, அவர் அவனுக்கு என்ன செய்தார் என்பதைக் கவனியுங்கள்.

இப்பொழுது, சாராளுக்கு ஏதோ சம்பவித்திருக்க வேண்டும் என்று நம்மெல்லாருக்கும் தெரியும். அவளுக்கு கிட்டத்தட்ட 100 வயதாக இருந்தது. இப்பொழுது, நீங்கள் வேதாகமத்தை வாசிக்கும் போது, ஏதோவொரு பள்ளியிலிருந்தோ அல்லது ஏதோவொரு வேதாகம கல்லூரியிலிருந்தோ வந்திருந்த அனுபவம் மட்டுமே உங்களுக்குக் கிடைத்திருக்குமானால், நீங்கள் ஏதோவொன்றைத் தவற விட்டு விடுகிறீர்கள்.

22. கவனியுங்கள், நீங்கள் முதலாவது தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறந்தாக வேண்டும். நீங்கள் அவ்வாறு மறுபடியும் பிறந்திராவிட்டால், தேவனுடைய வார்த்தை உங்களுக்கு ஒருபோதும் புரியவே புரியாது. தேவன் அவ்வாறு கூறியுள்ளார். "இந்த வேதாகமத்தை நான் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, விசுவாசிப்பவர்களைப் போன்ற பாலகருக்கு வெளிப்படுத்துவேன்" என்று தேவன் கூறியுள்ளார். நீங்கள் தேவனிடமிருந்து எதையாகிலும் பெற்றுக்கொள்ள விரும்பினால், வெறுமனே ஒரு குழந்தையாக இருங்கள். வேதாகமத்தை திறவுங்கள். இயேசுவை நேசிக்கத் தொடங்குங்கள்.

23. இப்பொழுது, என்னுடைய மனைவி எனக்கொரு கடிதத்தை எழுதும் போது, நல்லது, நான் அதை வாசிக்கிறேன். அவள் தொடங்கி, "அன்புள்ள பில்லி, நான் இன்றிரவு இங்கே உட்கார்ந்து, உம்மைக் குறித்தே அதிகமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்" என்று எழுதியிருப்பாள். அதைத்தான் அவள் அந்தத் தாளில் எழுதியிருக்கிறாள், ஆனால் அந்த வரிகளுக்கு இடையே என்ன இருக்கிறது

என்பதையும், அவள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறாள் என்பதையும் என்னால் கூற முடியும்.

நீங்கள் நிச்சயமாக வேதாகமத்தில், வரிகளுக்கு இடையே வாசித்தாக வேண்டும், ஏனென்றால் வெறும் வார்த்தையாக மட்டுமே அதை வாசிப்பவரிடமிருந்து தேவன் **அதை** மறைத்து வைத்திருக்கிறார். ஞானிகளின் கண்களுக் கும் கல்விமான்களின் கண்களுக்கும் அவர் **அதை** மறைத்து வைத்து, கற்றுக்கொள்பவரைப் போன்ற பாலகருக்கு வெளிப் படுத்தின வேதவாக்கியத்தையே நான் மேற்கோள் காட்டிக் கொண்டிருக்கிறேன். வேதாகமத்தை எப்பொழுதாவது வாசித் திருப்பவர்கள் எல்லாரும், “ஆமென்” என்று கூறுங்கள். [சபையார், “ஆமென்” என்கின்றனர் - ஆசிரியர்.] அப்படி யானால் தன்னைத்தான் தாழ்த்தும் குழந்தையாக அது இருக்கிறது, தற்பெருமையோடு இறுமாப்பாய் இருப்பதல்ல, ஆனால் தாழ்மையோடு இருந்து, “கர்த்தாவே, நான் **அதை** விசுவாசிக்கிறேன்” என்று கூறுங்கள்.

24. என்னுடைய நண்பர்களில் ஒருவராகிய ஜான் ஸ்பிரெல் (John Sproul) அவர்கள் ஒரு சிறு பயணமாக பிரான்சுக்கு வந்திருந்தார். அது அல்ஸாஸ் லோரெய்ன் (Alsace Lorraine) என்று நம்புகிறேன். அவர் ஒரு தோட்டத்திற்குள் நடந்து சென்ற போது, அங்கே இயேசுவின் உருவச் சிலை ஒன்று இருந்தது...

தொடர்புக்கு:

E- Mail : jebakumarsa@gmail.com
www.thefinish.in

# தேவனுடைய வெகுமதியை ஏற்றுக்கொள்ளுங்கள்

## ACCEPT GOD'S GIFT

53-0219

(தமிழாக்கம்: சகோ. S. A. ஜெபகுமார்)

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# தேவனுடைய வெகுமதியை ஏற்றுக்கொள்ளுங்கள்

இந்தச் செய்தியானது ஏழாம் தூதன் (வெளி. 10:7) சகோதரன். வில்லியம் மரியன் பிரான்ஹாம் அவர்களால் 1953–ம் வருடம், பிப்ரவரி மாதம், 19ம் தேதி, டல்லசி, ஃபுளோரிடா, அமெரிக்காவில் அளிக்கப்பட்டது. ஒலிநாடா ஒலிப்பதிவிலிருந்து அச்சிடப்பட்ட ஆங்கில புத்தகத்திலிருந்து ஏட்டிதழின் பக்கத்திற்கு சொல் வடிவமான செய்தியாக மாற்ற ஒவ்வொரு முயற்சியும் துல்லியமாக செய்யப்பட்டு, இப்புத்தகம் முழுமையாக அச்சிடப்பட்டு, இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது.

*வெளியிடப்பட்டது: செப்டம்பர் 2018*

# தேவனுடைய வெகுமதியை ஏற்றுக்கொள்ளுங்கள்

## (ACCEPT GOD'S GIFT)

வியாழக்கிழமை மாலை, பிப்ரவரி 19, 1953,
பெந்தெகோஸ்தே ஹோலினஸ் சபை,
டல்லசி, ஃபுளோரிடா, அமெரிக்கா

சகோதரன் பாக்ஸ்டர், உமக்கு நன்றி. மாலை வணக்கம், நண்பர்களே. நான் இன்றிரவு இங்கே இருப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நாம் நின்று கொண்டிருக்கிறோமே என்ற இப்படிப்பட்ட நிலைக்காக நான் வருந்துகிறேன், ஒவ்வொருவரும் வெளியே-வெளியே வீதியில் நின்றுகொண்டிருக்கிறார்கள். என்னை அழைத்து வர என்னுடைய மகன் வந்த போது, அவன், "ஏன், அப்பா, அவர்கள் சுற்றிலும் எல்லாவிடங்களிலும், வெளியே வீதிகளிலும் மற்றும் எல்லாவற்றிலும் நின்று கொண்டிருக்கிறார்கள்" என்றான். அவன், "சீக்கிரம், சீக்கிரம், சீக்கிரம்" என்றான். எனவே நீங்கள் சீக்கிரம், சீக்கிரமாய், துரிதப்பட வேண்டியிருக்கும் போது, அது ஒருவிதத்தில் கடினமாக ஆக்கி விடுகிறது இல்லையா? ஆனால் நீங்கள் இவ்விதமாக நின்று கொண்டிருக்க வேண்டி

யிருப்பது உங்களுக்கு மோசமாக இருக்கையில் நான் துரிதப் படுவது அவ்வளவு மோசமானது அல்ல, அதைக் குறித்து நான் வருந்துகிறேன்.

நாங்கள் இங்கே டல்லஸியில் இருப்பது எங்களுக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது...?... இங்கே எங்களுடைய ஒவ்வொரு நிமிட நேரத்தையும் மகிழ்ச்சியோடு அனுபவித்து வருகிறோம். ஏதோவொரு நாளில் நான் மீண்டும் உங்களோடு இருக்கும்படி எங்களால் திரும்பி வர முடியும் என்று நம்புகிறேன், நாம் ஆராதனைகளை நடத்தும்படி ஏதோவொரு நாளில் தேவன் நமக்கு ஒரு கூடாரம் அல்லது ஏதோ வொன்றைத் தருவார் என்று நாங்கள் உண்மையாகவே எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாம் - நம்முடைய ஜனங்கள் வந்து, அவர்களை நம்மோடு இருத்த, நம்முடைய இடங்கள் ஒருக்கால் போதுமான அளவில் பெரிதாக இருக்கவில்லை என்பதை நீங்கள் அறியும் போது, அது ஒருவிதத்தில் கடினமாக உள்ளது.

2. நீங்கள் செய்திருக்கிற எல்லாவற்றிற்காகவும் நாங்கள் உங்களுக்கு நன்றி கூறுகிறோம். ஊழியக்காரர்கள் எல்லா ருக்காகவும், அவர்கள் செய்துள்ளவற்றிற்காகவும் நாங்கள் உங்களுக்கு நன்றி கூறுகிறோம், மேய்ப்பர்களின் ஒத்துழைப்புக்காகவும் உங்களுக்கு நன்றி. நீங்கள் சபைக்குச் சென்று, கடினமாக உழைக்கிறீர்கள். தேவனுடைய இந்த மகத்தான நியமங்களை விசுவாசிப்பவர்களைப் போன்ற மனிதர்களாகிய இவர்கள் உங்களுக்குப் போதிப்பவைகள் சத்தியமாயிருக்க வேண்டும், தேவன் வழக்கமாக வந்து அது சத்தியம் என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார். எனவே நீங்கள் அதைக் கட்டாயம் விசுவாசித்தாக வேண்டும். அவர்கள் தேவனுடைய மனுஷர்களாக இருக்கிறார்கள். எனவே இந்தக் கூட்டங்களுக்கு உதவி செய்த சகோதரர்களாகிய உங்க ளுடைய - உங்கள் ஒவ்வொருவருடைய ஆராதனைகளும்

எல்லா நேரமும் அதிகமதிகமாய் விருத்தியடையும் என்று நான் நம்புகிறேன். ஜனங்களாகிய உங்களை தேவன் பரிபூரண மாய் ஆசீர்வதிப்பாராக.

நான் இதுவரையிலும் அதைக் குறித்து எதுவுமே சொல்லியிராத அநேகம் அநேகமான காரியங்கள் ஆராதனை களில் செய்யப்பட்டு வருகின்றன. நான் அதை அப்படியே போகும்படி விட்டு விட்டேன். ஆனால் நான் போன பிறகு... நீங்கள் கண்டுகொள்வீர்கள். மேய்ப்பர்களாகிய நீங்கள் இதை ஞாபகம் கொள்ளுங்கள், நான் போன பிறகு - அதற்குப் பிற்பாடு, ஜனங்கள் இதுவரையிலும் அதைக் குறித்து எதுவுமே அறிந்து கொள்ளாத அநேக காரியங்கள் அங்கே செய்யப்பட்டு வருவதை நீங்கள் காண்பீர்கள். ஆனால் ஸ்திரீகளும் மனிதர்களும் உங்களிடம் வந்து, "என்னுடைய வயிற்றுக் கோளாறு போய் விட்டது" என்றும், "என்னுடைய மூட்டு வீக்கம் (கீல்வாதம்) சுகமாகி விட்டது" என்றும் (கூறுவதை) நீங்கள் கண்டு கொள்வீர்கள். இப்பொழுது, மேய்ப்பரே, அது உண்மை அல்லவா என்று பார்க்கும்படி, அதைக் குறித்து வைத்துக்கொள்ளும். அவர்கள் அவ்வாறு கூறுவதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். எனவே நாங்கள் உங்களுக்கு நன்றி கூறுகிறோம்.

3. அவர்கள் எனக்காக ஒரு அன்பின் காணிக்கையை எடுத்ததாக இப்போது தான் என்னுடைய மேலாளர் என்னிடம் கூறினார். நான் அதைப் பாராட்டுகிறேன். நண்பர்களே, ஒரு அன்பின் காணிக்கைக்கு நான் உண்மையாகவே தகுதி யுடையவன் அல்ல. நான்-நான் தகுதியுடையவன் அல்ல... ஆனால் நான்-நான் அதைப் பாராட்டுகிறேன், ஏனென்றால் நான் ஆப்பிரிக்காவுக்கும் மற்ற இடங்களுக்கும் போவதற்கு உண்மையாகவே இப்பொழுது பணத்தைத் திரட்ட முயற் சித்துக் கொண்டிருக்கிறேன். நான் இதைக்கொண்டு அதைத் தான் செய்வேன். புரிகிறதா? படிப்பறிவில்லாத கருத்த

இருளில் இருக்கும் ஆயிரக்கணக்கான இலட்சக்கணக்கான ஜனங்கள் கொண்ட ஆப்பிரிக்கா தேசத்துக்கு அது என்னை அனுப்புகிறது. அது சரியான இடத்துக்கே போகும் என்பது எனக்குத் தெரியும்; நான் அதை உங்களுக்கு வாக்குக் கொடுக்கிறேன், அது... அதன் ஒவ்வொரு காசும் (penny) இயேசு கிறிஸ்துவின் நிமித்தமாகவே செலவழிக்கப்படும். எவ்வளவு கொஞ்சமாக (இருந்தாலும்)... ஒருக்கால் வீட்டில் ஆகாரத்திற்காகவோ, எனக்குத் தேவையான மளிகைச் சாமான்களுக்காவோ மற்றவைகளுக்காவோ நான் அதில் கொஞ்சம் செலவழிக்க வேண்டியிருக்கும், ஆனால் அதற்குப் புறம்பாக எனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு காசும் (cent) நேராக வெளிநாட்டு ஊழியங்களுக்குத் தான் போகிறது. அப்படியானால் அதை உறுதிப்படுத்தும் விதமாக நானே போகிறேன், நான் - நானே சரியாக அதை அங்கு கொண்டு சென்று, அதை செலவு செய்கிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்பதே என்னுடைய ஜெப மாயுள்ளது.

4. நான் சகோதரன்... அவர்களிடம் கொடுப்பேன். இது பெந்தெகோஸ்தே ஹோலினஸ் சபை என்று இந்த சகோதரியோ அல்லது யாரோ ஒருவரோ இன்று என்னிடம் கூறினார்கள் என்று நம்புகிறேன். இந்த பெந்தெகோஸ்தே ஹோலினஸ் சபையின் மேய்ப்பர் யார்?...?... நீர் தான் மேய்ப்பரா? உங்களுக்கு சகோதரன்...?... அவர்களைத் தெரியும். அது சரிதானே? [சகோதரன் பிரன்ஹாமிடம் ஒரு சகோதரன் பேசுகிறார் - ஆசிரியர்.] அது சரிதானா. நல்லது, அது மிகவும் அருமையாக உள்ளது. நல்லது, அவர் ஒரு... நிச்சயமாகவே, சகோதரன் பிரீமனும், நானும், சகோதரன் பிஷர் அவர்களும், நாங்கள் எல்லாரும் மிக, மிக அருமையான நல்ல நண்பர்களாக இருக்கிறோம். அப்படி யானால் கர்த்தர் இங்கே எங்களோடு இருந்தார் என்று நான்

அவர்களிடம் கூறும் போது, இங்கே இந்த பெந்தெகோஸ்தே ஹோலினஸ் சபையில் ஒரு உண்மையான கூட்டம் எங்களுக்கு உண்டாயிருந்தது என்ற செய்திகளை அவர்களிடம் கொண்டு செல்வதில் நிச்சயமுடையவனாயிருப்பேன். கர்த்தர் உங்கள் எல்லாரையும், உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

5. இப்பொழுது, இன்றிரவு, நீங்கள் இங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள், நான் ஒரு வேதவாக்கியத்தை சற்று வாசிக்கப் போகிறேன், அதன்பிறகு நாங்கள் சற்று நேரத்தில் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கத் தொடங்குவோம். நீங்கள் களைப்போடு நின்று கொண்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். வெளியேயும், கட்டிடத்தின் அடித்தளத்திலும், சுற்றிலும் களைப்போடு நின்று கொண்டிக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். நான் சரியாக இப்பொழுதே ஏதாவது செய்யக் கூடுமா என்று விருப்பமாயுள்ளேன். நான் எழும்பி, தேவனைத் துதித்துக் கொண்டிருக்கும் இங்கேயுள்ள ஒவ்வொருவரையும் ஆசீர்வதிக்க முடிந்து, தேவனை ஸ்தோத்தரித்து, ஒவ்வொருவரும் சுகமடைந்து, வெளியே சென்று, அங்கே எந்த வியாதியஸ்தர்களோ, முடமானவர்களோ, அல்லது யாருமே இல்லாமற் போகும்படியாக அங்கே ஏதோவொன்று அப்படியே என்னுடைய அதிகாரத்திற்குள் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்... அவ்வாறு செய்ய நான் விரும்ப மாட்டேனா?

ஓ, என்னால் அதைச் செய்யக் கூடுமானால், நான் சரியாக இப்பொழுதே அதைச் செய்வேன். ஆனால் அதைச் செய்யும்படியாக அது-அது எனக்குள் இல்லை. என்னால் அதைச் செய்ய முடியாது. நான் வெறுமனே ஒரு மனிதன் தான். புரிகிறதா? என்னால் செய்யக் கூடிய ஒரே காரியம் என்னவென்றால், உங்களுக்காக ஜெபத்தை ஏறெடுப்பதும், சத்தியத்தை உங்களிடம் கூறுவதும் தான். இந்தக் கூட்டங்

களில் கலந்து கொள்ள எப்படிப்பட்ட ஜனங்கள் வருகிறார்கள்… அது ஊழியக்காரர்கள் பிரசங்கம் பண்ணியிருக்கிற ஏதோவொன்றாக உள்ளது. அதற்கும் சற்று முன்பு தேவன் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வார் என்று, ஒருக்கால் உங்கள் மேய்ப்பர்கள் பல வருடங்களுக்கு முன்பே பிரசங்கம் பண்ணியிருக்கலாம். [ஒலிநாடாவில் காலியிடம் - ஆசிரியர்.] என்ன சம்பவிக்கும் என்று உங்களுடைய மேய்ப்பர்கள் பிரசங்கம் பண்ணினதை இது உறுதிப்படுத்துவதாக மாத்திரமே இருக்கிறது. அதைச் செய்து கொண்டிருக்கையில், இன்றிரவு நான் தாழ்மையோடு என்னால் (செய்ய முடிந்த) மிகவும் சிறந்ததைச் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறேன், நான் அதை எவ்வாறு பிரங்கம் பண்ண வேண்டுமென்று தேவன் நியமித்திருக்கிறதாக நான் விசுவாசிக்கிற விதமாக சுவிசேஷத்தை உங்களிடம் கொண்டு வரவே நான் முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளுங்கள், அவ்வாறு செய்வீர்களா? அப்படியானால், இது சரியாக சத்தியம் என்று விசுவாசியுங்கள்.

6. இப்பொழுது, வெளியிலும், கட்டிடத்தின் அடித்தளத்திலும் இருக்கிற நீங்களும், இந்நேரத்தில் இதைக் காண இயலாதிருக்கிற நீங்களும்… கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கல்வாரியில் மற்றவர்களுக்காக பட்ட பாடுகளினாலும் மரணத்தினாலும், உலகத்தில் இருக்கிற எக்காலத்திலும் உலகத்தில் இருக்கும் ஒவ்வொரு மனிதனுடைய சுகத்தையும் கிரயத்துக்கு வாங்கிக் கொண்டு விட்டார். இயேசு ஏற்கனவே கிரயத்தைச் செலுத்தி விட்டார், தேவனுடைய பார்வையில், நீங்கள் ஏற்கனவே சுகமடைந்து விட்டீர்கள். அங்கே தேவனுடைய பார்வையில் எந்த வியாதியுமே இல்லை. நீங்கள் ஏற்கனவே சுகமடைந்து விட்டீர்கள். இங்கே உள்ளேயும், வெளியேயும் இருக்கும் ஒவ்வொரு பாவியும், நீங்கள் எங்கே இருந்தாலும், தேவனுடைய பார்வையில், உங்கள் பாவங்கள் இப்பொழுதே உங்களுக்கு மன்னிக்கப்பட்டு விட்டன. ஆனால் நீங்கள்

அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால், நீங்கள் உங்கள் மேல் இயேசுவின் இரத்தம் இல்லாமல், ஒரு குமாரனாகவோ, குமாரத்தியாகவோ, அவருடைய சந்நிதியில் வரும் போது, நீங்கள் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று, ஒரு - நீங்கள் அங்கே வரும்போது, "அதை நீ புசிக்கும் நாளில் சாவாய்."

இப்பொழுது, நீங்கள் அந்த நிலையில் மரிக்க வேண் டியதில்லை. நீங்கள் ஒரு பாவியாக இருப்பதைத் தவிர்க்க முடியாது, ஏனென்றால் நீங்கள் ஒரு பாவியாகவே பிறக்கி றீர்கள், ஆனால் ஒரு பாவியாக தொடர்ந்து இருப்பதை உங்களால் தவிர்க்க முடியும்; தேவனுடைய பார்வையில், பாவம் ஏற்கனவே மூடப்பட்டு விட்டது. அவரால் பாவத்தைப் பார்க்க முடியாது. அவர்-அவர் நீதிபரராயும் இராஜாதிபத்தியம் உள்ளவராயும் இருக்கிறார். அவர் நீதியுள்ளவராக இருக்க வேண்டும்... [ஒலிநாடாவில் காலியிடம் - ஆசிரியர்.] சரியாக அப்பொழுதே. தேவனால் பாவத்தைப் பார்க்க முடியாது; அவர் பரிசுத்தர். ஆனால் ஒரு காரிலுள்ள முட்டுத்தாங்கியைப் (bumper) போன்று, இயேசுவின் இரத்தமானது அதை நெருங்க விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் ஒவ்வொரு முறை பாவம் செய்யும் போதும், அந்த முட்டுத் தாங்கியாகிய இயேசு கிறிஸ்து, உங்கள் பாவம் தேவனை அடையும் முன்னதாகவே உங்கள் பாவங்களில் உங்களை பற்றிப்பிடித்துக் கொள்கிறார். நீங்கள் அவரை நடத்துகிற விதத்துக்காக உங்களுக்கு வெட்கமாயில்லையா?

7. நான் ஒருநாள் அங்கே மேலே நோக்கிப் பார்த்து, அவர் எனக்காகச் செய்துள்ளதைக் கண்ட போது, நான் தாழ்மையோடு அவரிடம் சென்றதை நான் நினைவு கூருகிறேன். அங்கே ஒரு புத்தகத்தின் மேல் என்னுடைய பெயர் எழுதப்பட்டிருந்தது, ஓ, அதற்குக் கீழே என்ன எழுதப்பட்டிருந்தது. நான், "கர்த்தாவே, என்னை மன்னிப் பீரா?" என்று கேட்டேன்.

அவர் வெளிப்படையாக தமது கரங்களை எடுத்து, தம்முடைய பக்கவாட்டில் இட்டு, “சரி” என்றார். அவர் அந்தப் புத்தகத்தின் குறுக்கே “மன்னிக்கப்பட்டது” என்று எழுதி, அதை மூடி, அதைத் திரும்ப மறதியின் கடலில் போட்டு விட்டார். அது முதற்கொண்டு நான் சந்தோஷமாக இருந்து வருகிறேன். “இயேசு கிறிஸ்து உங்களை நேசிக்கிறார், தேவனுடைய கோபாக்கினை உங்களை நெருங்க விடாமல் தடுக்கிற ஒரே காரியம் அவரே. அவரை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள்” என்று உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் எனது தாழ்மையான வழியில் என்னால் சிறந்த முறையில் சொல்லும்படி முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்.

இப்பொழுது, நீ அவ்வாறு செய்த போது, அவர் - மேலும் அவர் தம்முடைய முதுகில் தழும்புகளைப் பெற்றுக் கொண்டார் (striped), “அவருடைய தழும்புகளால் குணமாகி றோம்,” அல்லது “நாம் குணமானோம்,” நாம் குணமாவோம் என்றல்ல, நாம் ஏற்கனவே குணமடைந்து விட்டோம். ஒவ்வொரு நபரும் சுகமடைந்து விட்டான். இப்பொழுது, நீங்கள் செய்ய வேண்டிய ஒரே காரியம் என்னவென்றால், நீங்கள் அதைக் கூறக்கூடும் முன்பே, முதலில் உங்கள் இருதயத்தில் அதை விசுவாசிக்க வேண்டும். நீங்கள் வெறுமனே உங்கள் உதடுகளிலிருந்து அதைக் கூறுவீர்கள் என்றால், உங்களுக்கு அது எந்த நன்மையும் செய்யாது. ஆனால்... லிருந்து. பாருங்கள், நாம்...

8. இது ஒரு ஆழமற்ற காரியமல்ல. இது... போன்ற ஏதோவொன்றல்ல. கடந்த மாலையில், ஒலிபரப்பு ஒன்றில், யாரோ ஒருவர், “விசுவாசிக்கிற ஒவ்வொரு நபரும் பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்டிருக்கிறான்” என்று கூறுவதைக் கேட்டேன்.

இப்பொழுது, அந்த ஊழியக்காரரோடு எனக்கு கருத்து வேற்றுமை கிடையாது, ஆனால் அவர்-அவர் அநேகமாக அந்த வேதவாக்கியத்தைப் புரிந்து கொள்ளவில்லை. அப்போஸ்தலர் 19ம் அதிகாரத்தில், பவுல் அங்கேயிருந்த அந்த பாப்டிஸ்டு ஜனங்களைப் பார்த்து, அவர்கள் தாங்கள் விசுவாசித்தது முதற்கொண்டு பரிசுத்த ஆவியைப் பெற்றார் களா என்று கேட்டான். நீங்கள் விசுவாசித்த போதே பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதல்ல. பரிசுத்த ஆவி என்பது நீங்கள் விசுவாசித்த பிறகு (பெற்றுக்கொள்ளும்) தேவனுடைய ஒரு வரமாக இருக்கிறது. அது உங்களுடைய விசுவாசத் திற்காக உங்களுக்குக் கொடுக்கப்படும் தேவனுடைய வரமாக இருக்கிறது. ஆனால் நீங்கள் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, அவரை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள உங்களால் முடிந்தும், அப்பொ ழுதும் பரிசுத்த ஆவியைக் கொண்டிராமல் இருக்கலாம். பரிசுத்த ஆவியின் வரம் என்பது விசுவாசிக்குரிய தேவ னுடைய தனிப்பட்ட வெகுமதியாக இருக்கிறது. நீங்கள் விசுவாசிக்கிற காரணத்தினால், இரட்சிக்கப்பட்டீர்கள், ஆனால் பரிசுத்த ஆவியாகிய தேவனுடைய தனிப்பட்ட வரமானது உங்கள் மேல் வரும்போது, நீங்கள் பரிசுத்த ஆவியால் நிறையப்படுகிறீர்கள்.

இப்பொழுது, பாருங்கள், அது ஒரு ஆழமற்ற காரியம் அல்ல. அது ஆழமான ஏதோவொன்று. நாம் இன்னும் குழந்தைகள் அல்ல; நாம் மனிதர்களும் ஸ்திரீகளுமா யிருக்கிறோம். இன்றிரவு சபையானது அந்த நிலையிலேயே இருக்க வேண்டும், ஆழமற்றதாக அல்ல, ஆனால் தேவ னுக்குள் ஆழமாக.

9. இப்பொழுது, சுகமாகுதல் என்பது நீங்கள் வெறு மனே, “நல்லது, நான்... ஆமாம், நான் அதை விசுவாசிக் கிறேன். நான் அதை விசுவாசிக்கிறேன்” என்று கூறும்

ஏதோவொன்றல்ல. இப்பொழுது, அதெல்லாம் சரிதான். அதுதான் நீங்கள் செய்யக் கூடிய சிறந்த காரியமாக இருந்து, வெறுமனே மனதில் சிந்தித்தோ அல்லது வெறுமனே, "நல்லது, நான்... ஆமாம், நான் - நான் அதைக் காண்கிறேன். நான் அதை விசுவாசிக்கிறேன்; நான் அதை ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறுவீர்களானால். அதன்பிறகு நீங்கள் அதை அந்த அடிப்படையில் ஏற்றுக் கொள்வீர்களானால், தொடர்ந்து இடைவிடாமல் மீண்டும் மீண்டும் அதையே கூறிக் கொண்டிருங்கள். அதை உரத்த சத்தமாகக் கூறுங்கள். மீண்டும் மீண்டும் அதையே கூறிக் கொண்டிருங்கள்; அப்படியே தொடர்ந்து, "நான் சுகமானேன். நான் சுகமானேன்" என்று கூறிக் கொண்டிருங்கள். நீங்கள் உண்மையாகவே அதை விசுவாசிக்கும் மட்டுமாக அதையே கூறிக் கொண் டிருங்கள். நீங்கள் அதை விசுவாசிக்கும் போது, அப்பொழுது தான் அது சம்பவிக்கப் போகிறது.

நீங்கள் ஒரு எதிர்மறையான சாட்சியைக் கொண்டிருக்க வேண்டாம். நீங்கள், "நல்லது, நான் இன்னும் இன்றைக்கும் மோசமாகவே உணருகிறேன். நான் நினைக்கிறேன் நான்..." என்று அறிக்கை செய்யும் ஒவ்வொரு தடவையும். நீங்கள் சரியாக தொடக்கத்தில் இருந்த அதே குழியில் மீண்டும் நேராகப் போய் விடுவீர்கள். நீங்கள் அறிக்கையிடத் துவங்கினாலொழிய பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிற ஒரு மனிதனோ அல்லது பெண்ணோ இங்கே இல்லை. "நான் பரிசுத்த ஆவியை இழந்து விட்டேன் என்று நம்புகிறேன். அது என்னை விட்டுப் போய் விட்டது என்று நம்புகிறேன். நான்... என்று நம்புகிறேன்" என்று அறிக்கையிடுவீர்களானால். நீங்கள் சரியாக கீழான நிலைக் குப் போய் விடுவீர்கள்; நீங்கள் ஒருபோதும்... மாட்டீர்கள். உங்களால்... கூடுமா.

10. கூர்ந்து கவனியுங்கள். உங்கள் அறிக்கையைக் காட்டிலும் மேலாக, நீங்கள் ஜீவிக்கவே மாட்டீர்கள். இயேசு நம்முடைய அறிக்கையின் பேரில் பிரதான ஆசாரியராய் இருக்கிறார் (அது சரியா? இப்பொழுது, எபிரெயர் 3:1, "வெளிப்படையாக அறிவித்தல்" என்ற அதே வார்த்தை தான் "அறிக்கையிடுதல்" என்ற வார்த்தையாகவும் உள்ளது என்பதை கற்றறிந்த பண்டிதர் எவரும் அறிவர், அதே மொழிபெயர்ப்பு தான்.), இப்பொழுது அவர் எதன்பேரில் பரிந்து பேசுவதற்காக, பிதாவினுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்? நம்முடைய அறிக்கையின் பேரில் பரிந்து பேசுவதற்காக. அவர் அதைச் செய்து விட்டார் என்று நீங்கள் முதலில் அறிக்கையிடும் மட்டுமாக உங்களுக்காக அவரால் எதுவுமே செய்ய முடியாது.

நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளும் போது... இப்பொழுது, நான் சந்தோஷமடைந்து, சத்தமிட்ட காரணத்தினால், இன்றிரவு நான் இரட்சிக்கப்பட்டிருக்கவில்லை... இரட்சிக்கப்படவில்லை. அதுவல்ல அது. தேவனுடைய வரம் என் வழியாக கிரியை செய்கிற காரணத்தினால் நான் இரட்சிக்கப்படவில்லை. என்னிடமிருந்து இயேசு கிறிஸ்து எதிர்பார்க்கும் நிபந்தனை களை நான் நிறைவேற்றின காரணத்தினாலே தான் நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். நான் வேதாகமத்தின்படி இரட்சிக் கப்பட்டிருக்கிறேன். பாருங்கள்? அது சரியா? புரிகிறதா? பேரில்... நான் இரட்சிக்கப்பட்டிருப்பது போன்று உணருகிற காரணத்தினால் அல்ல. உங்களுடைய உணர்ச்சிகளின் பேரில் நீங்கள் அந்த அடிக்கட்டைக்கு துரிதமாக மறுபக்கம் திரும்பிப் போகும்படி செய்ய சாத்தானால் முடியும். ஆனால் அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்று இருக்கும் போது, அவனால் அதைச் செய்ய முடியாது. பாருங்கள்? அவனால் அதைச் செய்ய முடியாது - அதற்குப் போக முடியாது.

அவனால் அதைக் கடந்து சிரமத்துடன் நடந்து செல்ல முடியாது; அது அவனைத் தோற்கடித்து விடும்.

11. இப்பொழுது, நீங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதாக விசுவாசித்த போது, உங்கள் இருக்கையில் உட்கார்ந்தபடி, வெளியிலோ - நீங்கள் எங்கே இருந்திருந்தாலும், நீங்கள் அதை ஏற்றுக்கொண்டு அறிக்கை பண்ணத் தொடங்கி, நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள் என்று ஜனங்களிடம் கூறினீர்கள். நல்லது, நீங்கள் தொடர்ந்து, "நான் இரட்சிக்கப்பட்டேன்" என்று சொல்லிக்கொண்டே இருந்தீர்கள்.

ஜனங்கள், "உனக்குள் எந்த வித்தியாசமும் காணப்படவில்லையே" என்று கூறினார்கள், ஆனால் அங்கே வித்தியாசம் இருந்தது என்பதை நீ நம்பினாய். அது சரியா? நீ தொடர்ந்து அறிக்கை செய்து கொண்டிருந்தாய், சற்று கழிந்து அது நீதிக்கேதுவாய் கிரியை செய்தது. இப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை உங்கள் அண்டை வீட்டார் எல்லாரும் மற்றும் அனைவரும் அறிந்து கொள்கின்றனர், ஏனென்றால் நீங்கள் அதை விசுவாசித்து, அதை அறிக்கை செய்தீர்கள். ஏன், என்ன சம்பவித்தது? எது உங்களை மாற்றினது? அவர் உங்கள் அறிக்கையின் பேரில் பிரதான ஆசாரியராய் இருந்து, பிதாவினுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து, நீங்கள் எதை அறிக்கை செய்கிறீர்களோ அதற்கான நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறார்.

இப்பொழுது, சுகமளித்தலுக்கும் அதே காரியம் தான். நீங்கள் அவரை உங்கள் சுகமளிப்பவராக ஏற்றுக் கொண்டு, உங்கள் உணர்ச்சிகளை விட்டு விடுகிறீர்கள். அது உணர்ச்சிகளின் மூலமாக அல்ல; அது விசுவாசத்தின் மூலமாகவே. நீங்கள் சுகமாகி விட்டீர்கள் என்று கூறுங்கள்; நீங்கள் சுகமாகி விட்டீர்கள் என்று விசுவாசியுங்கள்; நீங்கள் சுகமாகி விட்டது போன்று நடந்து கொள்ளுங்கள்; சுகமளித்தலை விசுவாசிக்

கிறவர்களோடு கூட சேர்ந்து கொள்ளுங்கள்; அப்போது தேவன் சரியாக உங்களை பரிபூரணமான முழு ஆரோக் கியத்துக்குக் கொண்டு வருவார்: அது தவறிப்போகவே செய்யாது.

சற்றே ஒரு எடுத்துக்காட்டுடன் இதைத் தெளிவாக்கு வோம். விசுவாசத்தைச் செயல்புரிய வைக்கவே நான் முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் (உங்களுக்குப் புரிகிறதா?), அப்படியானால் பரிசுத்த ஆவியானவர் ஒரு சில நிமிடங்களில் இங்கே நமக்கு என்ன செய்வார் என்பதை நான் காணலாம். அறிகுறிகளை ஒருபோதும் பார்க்க வேண்டாம். சீமாட்டியே, நீங்கள் ஒரு சக்கர நாற்காலியில் உட்கார்ந் திருக்கிற காரணத்தினால் (அதையே) நோக்கிப் பார்க்க வேண்டாம், அல்லது இங்கேயிருக்கும் இந்த வாலிபனே, தேவன் ஒரு பல்வலியைச் சுகப்படுத்துவதைக் காட்டிலும், அவருக்கு இது பெரிய காரியமல்ல (புரிகிறதா?), அது ஒரு துளி வித்தியாசத்தையும் உண்டாக்குவதில்லை.

ஆனால் இப்பொழுது, கவனியுங்கள். அவர் உங்கள் அறிக்கையின் பேரில் பிரதான ஆசாரியராய் இருக்கிறார். இப்பொழுது, அங்கே மோசமான நிலையிலுள்ள அறிகுறி களை யாராவது கொண்டிருந்திருப்பார்கள் என்றால், அது யோனாவாகத்தான் இருக்கும், அவன் நினிவேக்குப் போய்க் கொண்டிருக்கும் போது தான் அந்த மோசமான அறிகுறி களைக் கொண்டிருந்தான். அவன் பின்வாங்கி, நினிவேக்குப் போய்க் கொண்டிருந்தான், அல்லது, அவன் நினிவேக்குப் பதிலாக தர்சீசுக்குப் போய்க் கொண்டிருந்தான், அவன் தவறானக் கப்பலில், தவறானப் பாதையில் போய்க் கொண் டிருந்தான், அவன் ஒரு புயல்வீசும் கடலில் பின்வாங்கிப் போனவனாக ஓடிக் கொண்டிருந்தான். அவர்கள் அவனுடைய கைகளையும் கால்களையும் கட்டி, கப்பலை விட்டு வெளியே வீசி விட்டார்கள். அவன் கீழே சமுத்திரத்துக்குள் சென்றான்.

ஒரு திமிங்கலம் அவனை விழுங்கி விட்டு, எல்லா மீன்களும் செய்வது போன்று, அதனுடைய துடுப்புகளை (swimmer) இளைப்பாறப்பண்ணும்படி, அது சமுத்திரத்தின் அடிப்பாகத் திற்கு சென்று விட்டது. அங்கே தான் அவன் இருந்தான், அவனுடைய கைகளும் கால்களும் கட்டப்பட்டவனாக, பின்வாங்கிப் போனவனாக, ஒரு புயல்வீசும் கடலில், அநேக அடி ஆழ சமுத்திரத்தில் ஒரு திமிங்கலத்தின் வயிற்றில் இருந்தான்.

யாருக்காவது அறிகுறிகள் இருந்திருக்க வேண்டுமானால், அது யோனாவாகத் தான் இருந்திருக்கும். அவன் இந்த பக்கமாக பார்த்தால், அது திமிங்கலத்தின் வயிறாக இருந்தது; அவன் எங்கு நோக்கினாலும், அது திமிங்கலத்தின் வயிறா கவே இருந்தது. ஆனால் அவன் அதை நோக்கிப் பார்க்க மறுத்து விட்டான்.

நீங்கள் நோக்கிப் பார்த்து, "நான் இங்கேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறேனே" என்று கூறலாம்.

வேறு யாரோ ஒருவர் நோக்கிப் பார்த்து, "நல்லது, எனக்கு இருதயக் கோளாறு இருந்ததாக மருத்துவர் என்னிடம் கூறினார். எனக்கு கீல்வாதம் இருந்தது" என்று கூறலாம். அதைக் காண மறுத்து விடுங்கள்; அதை நம்பவும் மறுத்து விடுங்கள். அது உண்மை.

13. யோனா, "அவைகள் பொய்யான மாயைகள்" என்றான். அவன், "நான் இன்னும் ஒருவிசை உமது பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன்" என்று தேவனிடம் கூறினான்.

அதற்குக் காரணம் என்னவென்றால், சாலமோன் அந்த ஆலயத்தைப் பிரதிஷ்டை பண்ணின போது, அவன், "உமது ஜனங்கள் எங்காவது தொல்லையில் அகப்பட்டு, இந்த பரிசுத்த ஸ்லத்தை நோக்கி ஜெபம் பண்ணுவார்களானால், நீர்

பரலோகத்திலிருந்து அதைக் கேட்டருளும்" என்று (ஜெபம்) பண்ணியிருந்தான்.

அவன் அதை விசுவாசித்தான், தேவன் சாலமோனுடைய ஜெபத்தைக் கேட்டருளினார் என்று யோனா விசுவாசித்து, இவ்வாறு கூறத் தொடங்கினான், "நான் இந்த திமிங்கலத்தின் வயிற்றை நோக்கிப் பார்க்க மாட்டேன். என்னுடைய பின்வாங்கிப் போன நிலைமையைக் குறித்தும் நான் யோசித்துக் கொண்டிருக்க மாட்டேன். நான் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்கியே பார்த்து, அறிக்கை செய்து கொண்டிருப்பேன்" என்று கூறினான். தேவனோ அங்கே கீழே ஆக்ஸிஜனை அனுப்பி, மூன்று பகலும் மூன்று இரவும் அவனை உயிரோடு வைத்திருந்து, அவனைச் சரியாக நினிவேயில் கொண்டு போய்ச் சேர்த்தார், அவன் அதைச் சேர்ந்தவனாகத்தான் இருந்தான்.

நல்லது, சாலமோன் அந்த ஜெபத்தை ஏறெடுத்திருப்பான் என்றால்... யோனாவுக்கு இருந்த நிலைமையைப் போன்று அல்லது அதில் பாதியாகிலும் இங்கேயிருக்கிற (உங்களில்) யாருக்கும் இல்லை. அவனுக்கிருந்த அறிகுறிகளைப் போன்ற அறிகுறிகள் உங்களுக்கு எதுவுமில்லை. நல்லது, அவன் அந்த நிலையில் இருந்து, ஒரு மனிதனுடைய கரங்களால், பூமிக்குரிய ஒரு மனிதனாகிய சாலமோனால் கட்டப்பட்ட ஒரு ஆலயத்தை நோக்கிப் பார்த்து, உட்கார்ந்து ஜெபித்து, சாலமோனுடைய ஜெபத்தில் விசுவாசம் கொள்ள அவனால் முடியுமானால், இன்றிரவு, நீங்களும் நானும் இங்கே உட்கார்ந்து, உங்கள் அறிக்கையின் பேரில் பரிந்து பேசும் படியாக அங்கே தம்முடைய இரத்தத்தோடு தேவனுடைய வலது பாரிசத்தில் நின்று கொண்டிருக்கிற இயேசு இருக்கும் தேவனுடைய சிங்காசனத்தை எவ்வளவு அதிகமாக நோக்கிப் பார்க்க வேண்டும். அப்படியே அறிகுறிகளைக் கொண்டிருக்க மறுத்து விடுங்கள்.

14. அறிகுறிகள் என்பது இதைப் போன்ற ஏதோ வொன்றாக உள்ளது, உதாரணமாக, இப்பொழுது நீங்கள் வீட்டுக்கு, உங்கள் ஸ்லத்திற்கு போகும் போது, நாளை துரித பார்சல் முகவர் (express agent) வந்து, "நீங்கள் தான் திருமதி. ஜோவா?" என்று கேட்கிறான்.

"ஆமாம்."

"நான் உங்களுக்காக ஒரு பரிசை வைத்திருக்கிறேன்."

"சரி. என்ன அது?" அவன் ஒரு-ஒரு கூடையை அல்லது பெட்டியைக் கொடுக்கிறான், அப்போது அந்தப் பெட்டியில் ஏதோவொன்று மோதி தட்டிக் கொண்டிருப்பதைக் கேட்கி றீர்கள். உடனே நீங்கள் அதனுள்ளே பார்க்கிறீர்கள். அதில் ஒரு பெரிய பெட்டி (நிறைய) பாம்புகள், கொடிய நச்சுப் பாம்புகள் இருக்கின்றன. நல்லது, அந்தக் காரியங்கள் உங்களுக்குப் பிடிக்காது.

நல்லது, நீங்கள், "எனக்கு இவைகள் வேண்டாம்" என்று கூறுகிறீர்கள்.

"ஓ, ஆனால் இவைகள் உங்களுடையது தான். யாரோ இவைகளை உங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இதோ உங்கள் பெயர் இருக்கிறது. இதோ பெயர் உள்ளது. யாரோ இந்தப் பாம்புகளை உங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள்; இவைகள் உங்களுடையது தான். நீங்கள் இவைகளைப் பெற்றே ஆக வேண்டும்."

இப்பொழுது, ஒரு வகையில், அவைகள் உங்களுடையது தான், வேறொரு வகையில், அவைகள் உங்களுடையது அல்ல. யாரோ ஒருவர் அவைகளை உங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள், ஆனால் நீங்கள் அவை களைப் பெற்றுக்கொண்டதாக கையொப்பமிடும் மட்டுமாக அவைகள் உங்களுடையது அல்ல. நீங்கள் அவைகளைப்

பெற்றுக் கொண்டதாகக் கையொப்பமிடும் போது, அவைகள் உங்களுடையதாகி விடுகிறது. ஆனால் நீங்கள் அவை களுக்காக கையொப்பமிட மறுத்து விடுவீர்களானால், அவன் அவைகளை அந்த விரைவு பார்சல் நிறுவனத்திற்கே திருப்பி எடுத்துச் சென்றாக வேண்டும். அவைகளை உங்களுக்கு அனுப்பிய நபரிடமே அவைகளை அந்த விரைவு பார்சல் நிறுவனம் (திருப்பி) அனுப்பியாக வேண்டும். அது சரிதானா?

நல்லது, பிசாசு கொண்டு வருகிற எதற்கும் நீங்கள் கையொப்பமிட வேண்டாம். இல்லை, ஐயா. அப்படியே அதைப் பெற்றுக்கொள்ள மறுத்து விடுங்கள். இல்லை, ஐயா. "நான் அதை வாங்க மாட்டேன். பிசாசே, நீ அவை எல்லாவற்றையும் திருப்பி எடுத்துச் சென்று விடு. அவ்வளவு தான். நான் அதை வாங்க மாட்டேன்" என்று கூறி விடுங்கள். உங்களுடைய வியாதிகளையோ, உங்களுடைய கீல்வாதத் தையோ, அது என்னவாக இருந்தாலும், அதைப் பெற்றுக் கொள்ள மறுத்து விடுங்கள், "நான் அதைப் பெற்றுக்கொள்ள மாட்டேன். அவருடைய தழும்புகளால் நான் குணமாகிறேன்" என்று (கூறுங்கள்). உங்கள் தீர்மானத்தில் உறுதியாக நில்லுங் கள். அதை அறிக்கை செய்யுங்கள். அதை விசுவாசித்து, அங்கேயே தரித்திருங்கள். தேவன் அதை நிறைவேற்றுவார். அது என்னவாக இருந்தாலும் காரியமில்லை, அப்படியே அவரை விசுவாசியுங்கள்.

15. சரி, நீங்கள் ஒரு அருமையான ஜனக்கூட்டமாக இருக்கிறீர்கள். நான்-நான் ஒரு பெரிய பிரசங்கி அல்ல, ஆனால் இன்றிரவு சிறிது பேச வேண்டுமென்று நிச்சய மாகவே விரும்பினேன், ஆனால் என்னால் முடியவில்லை. நான் இதை விட்டு... அப்பால் சென்று விடுவேனோ என்று நான்-நான் பயப்படுகிறேன். இப்பொழுது சுகமளித்தலின் அபிஷேகத்திற்காக முழுவதும் மணிக்கணக்காக ஜெபித்து

விட்டு, வந்து, பிரசங்கம் பண்ணத் தொடங்கினேன், செய்ய வேண்டிய சரியான காரியம் அதுவல்ல.

நான் கொஞ்சம் வேதவாக்கியத்தை வாசிக்க விரும்பு கிறேன், அதன்பிறகு நாம் ஜெப வரிசையை அழைப்போம். பரிசுத்த யோவான் 5-ம் அதிகாரம், 33, 33ம் வசனத்தில் துவங்குவோம். இப்பொழுது, கூர்ந்து கவனியுங்கள்.

**நீங்கள் யோவானிடத்தில் அனுப்பி விசாரித்தீர்கள், அவன் சத்தியத்திற்குச் சாட்சிகொடுத்தான்.**

**நான் ஏற்றுக்கொள்ளுகிற சாட்சி மனுஷருடைய சாட்சியல்ல, நீங்கள் இரட்சிக்கப்படுவதற்காகவே இவை களைச் சொல்லுகிறேன்.**

**அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்; நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள்.**

**யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மை யான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது.**

16. உங்களுக்கு விருப்பமானால், நாம் சற்று நேரம் எல்லாவிடங்களிலும் நம்முடைய தலைகளைத் தாழ்த்து வோமாக. இப்பொழுது உள்ளேயும் வெளியிலும் எல்லா விடங்களிலும் இருக்கிற நண்பர்களே, ஆழமான உத்தமத் தோடு இருங்கள்... இப்பொழுது, நம்முடைய விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய அவரை நோக்கிப் பார்ப்போம், அவருடைய நாமத்தினாலே, இரண்டு மூன்று

பேர் (எங்கே) கூடியிருந்தாலும், அங்கே அவர் இருப்பார் என்று வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார்.

இப்பொழுது, கர்த்தாவே, நீர் சரியாக இங்கேயிருக்கிறீர் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். தேவனே, நாங்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் வருகிறோம், ஏனென்றால் நாங்கள் வருவதற்கு எங்களுடைய சொந்த நாமமோ அல்லது தகுதிகளோ எதுவும் எங்களுக்குக் கிடையாது. நாங்கள் எங்களுடைய சொந்த நாமத்தில் உள்ளே வருவோமென்றால், நீர் எங்களை ஏற்றுக்கொள்ள மாட்டீர். ஆனால் இன்றிரவு வியாதிப்பட்டுள்ள ஜனங்களைக் குறித்தும், உமது பிள்ளைகளாகிய இவர்களுடைய நிலைமைகளைக் குறித்தும் மிக ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளோம், நாங்கள் வருகிறோம், நாங்கள் அவருடைய நாமத்தில் வருவோமானால், எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நீர் கேட்டருளுவீர் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற அவருடைய நாமத்தைத் தரித்துக்கொள்ளும் வரை அவ்வாறு செய்கிறோம். "என் நாமத்தினாலே நீங்கள் பிதாவினிடத்தில் எதைக் கேட்டாலும், நான் அதைச் செய்வேன்." எனவே நாங்கள் அவருடைய நாமத்தில் வந்து, பரலோகத்தின் தேவனை, மகத்தான Amoyah-ஐ அறிந்து கொள்கிறோம்... இன்றிரவு இந்த சபையைக் கீழ்நோக்கிப் பாரும், வெளியே முற்றத்தில் நின்று கொண்டிருப்பவர்களையும், கீழே அடித்தளத்தில் இருக்கிறவர்களையும் நோக்கிப் பார்த்தருளும்... உம்முடைய அந்த மகத்தான எக்ஸ்ரே கண்களைக் கொண்டு, மனிதனுடைய ஆத்துமாவுக்கு உண்மையைப் போன்று காணப்படுகிற எதுவுமே உமக்கு மறைவாயிருக்கவில்லை, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர். ஒவ்வொரு நபரையும் உமக்குத் தெரியும். நீர் அறியாமல், ஒரு அடைக்கலான் குருவி (சிட்டுக்குருவி) கூட தெருக்களில் விழ முடியாது. நாங்கள் இப்பொழுது ஜெபித்துக் கொண்டிருக்கிறோம் என்று நீர்

எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கிறீர்? பிதாவே, நீர்-நீர் இன்றிரவு எங்களுக்காக இதைச் செய்வீரா?

17. உமது பார்வையில் எனக்கு தயவு கிடைக்குமானால், கர்த்தாவே... உம்மைச் சேவிக்க என்னால் சிறந்ததை முயற்சித்திருக்கிறேன், எப்படிச் செய்வது என்று எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் முயற்சித்திருக்கிறேன், நான் அநேக தவறுகளைச் செய்திருக்கிறேன் என்றும், இன்றிரவு அறுப் புண்டு போகவே நான் பாத்திரனாயிருக்கிறேன் என்பதையும் அறிந்திருக்கிறேன், ஆனால் கர்த்தாவே, அது - உம்முடைய கிருபையின் வழியாகவே நாங்கள் இங்கேயிருக்கிறோம்.

கர்த்தாவே, நீர் என்னிடம் கூறி, வியாதியஸ்தருக்காக ஜெபிக்கும்படியாக, என்னை வெளியே அனுப்பினது முதற் கொண்டு, நான் தாழ்மையோடு இருக்கவே முயற்சித்திருக் கிறேன். நான் போக எனக்கு மகத்தான பெரிய இடங்கள் இருக்க வேண்டியதில்லை. சிறிய சபையே எனக்கு நன்றாக உள்ளது... நான் போக வேண்டுமென்று நீர் விரும்புகிறதைப் போல் காணப்படுகிற எந்த இடமாயிருந்தாலும், நான் அங்கு போகவே முயற்சிக்கிறேன். நான் எப்போதுமே எங்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கு கனத்தையும் மகிமை யையும் செலுத்தவே முயற்சித்திருக்கிறேன், அவர் அங்கே திரும்பவும் துவங்கி, உலகத்தின் முடிவுபரியந்தம் இந்த ஜனங்களோடு இருப்பதாக அவர் வாக்குப்பண்ணினதாக நான் உணருகிற கிரியைகளை செய்து முடிக்கவே முயற்சித்து, எல்லா துதியையும் மகிமையையும் அவருக்கே செலுத்திக் கொண்டிருக்கிறேன்.

18. இப்பொழுது, கர்த்தாவே, காத்துக் கொண்டிருக்கும் இந்த ஜனக்கூட்டத்தின் மேல் நோக்கிப் பாரும். மகத்தான தேவ ஆவியை அவர்கள் மேல் அனுப்பும். சுகமளித்தலின் தூதனானவர் தாமே, இன்றிரவு இந்தக் கட்டிடத்தின் மேல் தம்முடைய மகத்தான செட்டைகளை விரித்து எல்லா

அவிசுவாசத்தையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து, சற்று கழிந்து இந்தப் பாளயத்தில் அவ்வளவு மகத்தான ஒரு சந்தோஷம் இருப்பதாக, கர்த்தாவே, இவர்கள் அவருடைய ஆசீர்வாதங்களின் கீழாக ஓடி வந்து, காத்துக் கொண் டிருக்கிறார்கள். அந்த மகத்தான பெரிய இரக்கம் மற்றும் விசுவாசத்தின் பனித்துளிகள் அவருடைய செட்டைகளி லிருந்து ஒவ்வொரு நபரின் மேலும் இன்னுமாக விழுவதாக, அவர்கள் ஒவ்வொரு பாவத்திலிருந்தும் விடுதலை ஆவார் களாக, ஒவ்வொரு கட்டிலிருந்தும் விடுவிக்கப்படுவார்களாக, அவர்கள் வந்து, அவரைச் சேவித்து, தங்களுடைய வியாதிகளிலிருந்து சுகமடைவார்களாக. நாங்கள் இன்றிரவு எங்கள் தனிப்பட்ட வீடுகளுக்குப் போகும் போது, தேவனே, ஒவ்வொருவரையும் ஆசீர்வதியும். அவருடைய பிரசன்னத் தின் நிமித்தமாக, எம்மாவூரிலிருந்து வந்தவர்களைப் போன்று, "நம்முடைய இருதயங்கள் நமக்குள்ளே கொழுந்து விட்டு எரியவில்லையா" என்று நாங்கள் கூறுவோமாக. தேவனே, இந்தச் சிறிய சபையை ஆசீர்வதித்தருளும். ஒத்துழைப்பு கொடுத்து வருகிற ஒவ்வொரு சபையையும் ஆசீர்வதியும். கர்த்தாவே, ஏதோவொரு நாளில், உமக்குச் சித்தமானால், இந்த அழகான பட்டணத்திற்கு நாங்கள் திரும்பி வந்து, அங்கே அநேக, அநேக வாரங்களாக ஒரு பழைமை நாகரீகமான எழுப்புதலை நாங்கள் கொண்டிருக்கும்படி அருளும், அநேக காரியங்கள் செய்யப்படுவதாக. நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

19. உங்களுக்கு நன்றி. இப்பொழுது, இன்றிரவு துவங்கு வோம். அவர்கள் இன்று புதிய பிரிவு ஜெப அட்டைகள் எல்லாவற்றையும் விநியோகித்திருக்கிறார்கள், முழுவதும் புது பிரிவுகளாக உள்ள அநேக, அநேகமான ஜெப அட்டைகள், அவைகள் "M" என்ற எழுத்தோடு துவங்குகிறது. இப்பொ ழுது, நாம்... கொண்டிருப்போம். ஒரே சமயத்தில் மிக அநேகர்

நின்று கொண்டிருக்க முடியாது. நாம் இங்கே எத்தனை பேர் நிற்க முடியும்? சரி. அது யார், அவர்கள்... என்று கூறினார்களே. ஆமாம். சரி. சரி. மேய்ப்பர்களும், சகோதரன் பாக்ஸ்டர் அவர்களும், இவர்களும், நாம் ஒரே நேரத்தில் ஏறக்குறைய மூன்று பேர்களை அழைக்கலாம் என்று யோசனை கூறுகிறார்கள், ஏனென்றால் அப்பொழுது அவர்கள் நின்று கொண்டிருப்பதைத் தவிர்க்கலாம். சரி, அது அப்படியே அருமையாக இருக்கும்.

நல்லது, அப்படியானால் நாம் சரியாக முதலாவது எண்ணிலிருந்து துவங்கலாம், சரியாக அதிலிருந்து துவங்க லாம். M-1 யாரிடம் இருக்கிறது? அது எங்கேயிருக்கிறது? M-1, ஜெப அட்டை M-1. உங்கள் ஜெப அட்டையில் பாருங்கள், அவர்கள்... அது இவ்விதமான ஒரு சிறு அட்டை யாக இருக்கும், அதன் முன்புறத்தில் உங்கள் பெயரும், முகவரியும் இருக்கும்; இங்கேயுள்ள இந்தப் பக்கத்தில்... இங்கே கீழேயுள்ள இந்தப் பக்கத்தில், ஒரு-ஒரு எழுத்து "M" இருக்கிறது, அது 1ஆக இருக்கும். M-1, M-2, M-3. நம்மால் அவர்களை வெளியே கொண்டு வர முடியுமா என்று பார்ப்போம். அவர்களில் சிலர் வெளியிலிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்; அவர்களில் சிலர் பிற்பகல் கூட்டத்தில் இருந்தார்கள்; அவர்களில் சிலர் ஒருக்கால் அடித்தளத்தில் நின்று கொண்டு இருக்கலாம். எழுத்து M என்று தொடங்கும் ஜெப அட்டைகளை வைத்திருக்கிற நீங்கள் எங்கேயிருந் தாலும், இப்பொழுது அழைக்கப்பட ஆயத்தமாயிருங்கள். நம்மிடம் M-1, M-2, M-3 ஆகியவை உள்ளன. அது போதுமானது...

# விசுவாசம் என்பது சுயநினைவற்றதாகும்

# Faith is unconscious

--------★★★★★--------

**101.** கவனியுங்கள். நான் ஒரு காரியத்தைக் கூறப் போகிறேன். கவனியுங்கள். விசுவாசம் என்பது சுயநினை வற்றதாகும் (Faith is unconscious). (unconscious என்ற வார்த்தைக்கு "சுயநினைவற்றது", "தன்னுணர்வற்றது", "மயக்க மாக" என்ற அர்த்தங்களும் உண்டு – மொழிபெயர்ப்பாளர்.) ஆமென். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? உலகத்தைச் சுற்றிலும் பிரயாணம் பண்ணி, எல்லா வித்தியாசமான குணா திசயங்களைக் கொண்ட ஜனங்களைச் சந்தித்த வருடங்களில் நான் அதைக் கற்றுக் கொண்டேன். ஆனால் விசுவாசமானது சுயநினைவற்றதாகும். நீங்கள் விசுவாசத்தைப் பெற்றும் அதை அறியவும் கூட இல்லை. அது உண்மை.

**102.** இயேசு கிறிஸ்து ஒரு புயலில் இருந்தாலும், கடும் புயல்காற்றானது அந்தப் படகில் மோதி ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கம் வரையில் தாக்கினாலும், அல்லது ஒரு கூட்டம் பிசாசுகளின் முன்னால் அவர் நின்று கொண்டிருந்தாலும் அது ஒரு காரியமில்லை; அவர் எவ்விடத்தில் தொங்கிக் கொண் டிருந்தாலும், அது அவரை ஒருபோதும் அசைக்கவேயில்லை. அவர் அதனூடாக அமைதியாக நடந்து அவரால் கூடுமானவரை அமைதியாகவே இருந்தார். ஏன்? அவர் பயத்தைக் குறித்தும், அவரைச் சுற்றியுள்ள எதையும் குறித்தும் வெறுமனே சுயநினை வற்றிருந்தார். அது உண்மை. அது சம்பவித்தாலும் சம்பவிக்கா

மல் போனாலும் அவர் சுயநினைவற்றவராயிருந்தார்; அது சம்பவிக்கப்போகிறது என்று அவருக்குத் தெரியும், ஏனென்றால் தேவன் அவ்வாறு கூறினார். அவர், "ஓ, நான் முற்றிலுமாக ஜெபித்து விட்டேனா என்று வியப்படைகிறேன்? நான் போதுமான நீண்டகாலம் உபவாசம் இருந்து விட்டேனா என்று வியப்படை கிறேன்? நான் இதை செய்து விட்டேனா என்று வியப்படைகி றேன்?" என்று கூறவில்லை. அவர் வெறுமனே சுயநினைவற்று நடந்து சென்றார். அது சரியே. தேவன் சொன்னது சத்தியம் என்பதை அவர் விசுவாசித்தார். அந்த வார்த்தைகள் நிறைவேறி யாக வேண்டும், அவைகளை நிறைவேற்றுவதற்காகவே அவரு டைய ஜீவியம் இருந்தது என்பதை அவர் அறிந்திருந்தார். அது சரியே.

**103.** நீங்களும் கூட அதை நிறைவேற்றுவதற்காகவே இங்கிருக்கிறீர்கள். பயத்தைக் குறித்து சுயநினைவற்றவர்களாய் நடந்து செல்லுங்கள். குற்றம் கண்டுபிடிக்கப்படுவதைக் குறித்து சுயநினைவற்றவர்களாய் நடவுங்கள். உலகத்தைக் குறித்து சுயநினைவற்றவர்களாய் நடவுங்கள். நீங்கள் கிறிஸ்துவுக்குள் நடப்பது போல நடவுங்கள். வலது புறமோ இடது புறமோ எந்த கவனமும் செலுத்தாமல் அப்படியே தொடர்ந்து அவரோடு நடந்து செல்லுங்கள். சபையில் ஏதோவொன்று எழும்புமானால், தேவ னோடு நடவுங்கள். அல்லேலூயா. வியாதி உங்களைத் தாக்கினால், தேவனோடு நடவுங்கள். அண்டை வீட்டுக்காரனுக்கு உங்களைப் பிடிக்கவில்லை என்றால், தேவனோடு நடவுங்கள். அப்படியே தொடர்ந்து தேவனோடு நடந்து கொண்டேயிருங்கள்.

**104.** ஏனோக்கு ஒருநாள் அவ்விதமாகவே நடந்து சென்றான். அவன் என்ன செய்தான் என்று உங்களுக்குத் தெரியுமா? அவன் வீடு வரைக்கும் வழியெல்லாம் தேவனோடே நடந்து சென்றான்; இச்சமயத்திலோ அவன் மேலேயுள்ள பாதையை அடைந்தான், அவன் அதற்கு மேலும் திரும்பி வர விரும்பவில்லை. ஆமென்.

**105.** தேவனோடு நடவுங்கள். நீங்கள் மரிக்கப்போகிறீர்கள் என்று மருத்துவர் கூறலாம்; தேவனோடு நடவுங்கள். ஆமாம். உங்களால் முடியாது என்று மருத்துவர் கூறலாம்... நல்லது; தேவனோடு நடவுங்கள். அப்படியே தேவனோடு நடந்து செல்லுங்கள்; அவ்வளவு தான். "நான் உன்னை விட்டு விலகு வதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை. நான் உலகத்தின் முடிவுபரியந்தம் உங்களோடு இருப்பேன்" என்று தேவன் உங்க ளுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அவர் உங்களுக்குக் கொடுத்து, உறுதிப்படுத்தியிருக்கிற அந்த உடன்படிக்கையின் மூலமாக அவர் ஆணையிட்டுள்ளார். அப்படியானால் அப்படியே தேவனோடு நடவுங்கள்.

**செய்தியின் தலைப்பு:** அவர் தமது பேரிலே தானே ஆணையிட்டார், 54–1212

--------★★★★★--------

# எமது வெளியீடுகள்:

1. *தேவதூதன்*
2. *ஓர் கலியாண விருந்து*
3. *பயன்படுத்தப்பட்ட ஓர் சால்வை*
4. *சபை ஒழுங்கு*
5. *கிறிஸ்துவின் ஊழியம்*
6. *விசுவாசமுள்ளவனாயிரு*
7. *சிமியோன்*
8. *அவர் உங்களை விசாரிக்கிறவர்*
9. *தீவிரமாய் வந்து அங்கே ஓடித் தப்பித்துக்கொள்*
10. *வார்த்தையின் அதிகாரத்தில் இயேசு*
11. *எபிரெயர் அதிகாரம் - 6, பாகம் - 2*
12. *ஆயத்தம்*
13. *மகத்தான யுத்தவீரனாகிய யோசுவா*
14. *கர்த்தரிடமிருந்து கிடைக்கப்பெற்ற தரிசனம்*
15. *ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது?*
16. *கிருபைக்குப் பதிலாக நியாயப்பிரமாணத்தை சபை தெரிந்து கொள்ளுதல்*
17. *ஈஸ்டர் சூரிய உதயம்*
18. *இராப்போஜனம் (1963)*

19. என்னைப் பின்பற்றி வா (1963)
20. பிசாசின் வல்லமை
21. சுய சரிதை
22. இந்த மலையைப் பார்த்துப் பேசு
23. தாய்மார்களின் தினம்
24. சாட்சி
25. யூகித்தல்
26. தேவனுடைய கண்
27. ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை
28. இயேசுவும் சபிக்கப்பட்ட லேகியோனும்
29. மிருகத்தின் முத்திரையும் தேவனுடைய முத்திரையும், பாகம் -1
30. உன் வீட்டார்
31. மோசே
32. யவீரு
33. நான் என் வழியைச் சிந்தித்துக்கொண்டு
34. வியாதிகளும் துன்பங்களும்
35. தீர்க்கதரிசியாகிய எலிசா
36. எங்கள் நம்பிக்கை தேவனிடத்தில் இருக்கிறது
37. பேழை
38. தீர்மானத்தின் நேரம்
39. ஜெபவரிசை
40. ஐக்கியம்
41. விசுவாசிக்க மாத்திரம் செய்
42. தனிப்பட்ட பேட்டி
43. திடீரென்று சபையானது இரகசியமாக மறைந்து போகுதல்
44. வேளை வந்தது
45. வில்லியம் பிரன்ஹாம் அவர்களின் தரிசனங்கள்
46. வார்த்தை மாம்சமானது (இந்திய பிரயாணம்)
47. ஞானஸ்நான ஆராதனை
48. விசுவாசம் (ஆப்பிரிக்க பயண அறிக்கை)
49. வெளிப்படுத்துதல்கள்
50. கேதரா தேசத்து வெறிபிடித்த மனிதன்
51. ஆபிரகாம்
52. தேவனை அணுகும்விதம்
53. தேவனுடைய வெகுமதியை ஏற்றுக்கொள்ளுங்கள்

# தொடர்புக்கு:

**E- Mail : jebakumarsa@gmail.com**
**www.thefinish.in**